குழந்தைகள் பத்திரிகை

20-7-1975

50 காசு

கோகுலம்



RAAS/B/156 TAM



12 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள் தங்களது சேமிப்புக் கணக்கை தாமே நடத்தலாம்.

கோகுலம்

மலர் 4 □ இதழ் 8

ஜூலை 20, 1975

ராட்சஸ. ஆடி 4

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்

சந்தா விவரம்:

உள்நாடு

ஒரு வருடம் ரூ. 13-00
ஆறு மாதம் ரூ. 6-50

வெளிநாடுகள் :

ஆண்டுச் சந்தா ரூ. 27-50

(விடைகள் 9-ம் பக்கம்)




1. இது எந்த நாட்டில் உள்ள புராதனச் சின்னம் என்று சொல்ல முடியுமா?



2.


இது என்ன?



3. அபூர்வமான கத்திகளின் வரிசையிலே இது ஒரு நாட்டின் தேசிய ஆயுதமாகக் கருதப்படுகிறது. இது இன்னமும் இந்நாட்டு மக்களின் புழக்கத்தில் உள்ளது. இந்தக் கத்தியின் பெயரும் இதை உபயோகிக்கும் நாட்டு மக்களின் பெயரும் என்ன?



5. மூன்று கோபுரங்களுள்ள இந்தச் சர்ச்சிலே மூணு மூணாகப் பல அதிசயங்கள் உள்ளனவாம். இந்தச் சர்ச் எங்கே இருக்கிறது தெரியுமா?



4. தலையலங்காரம் அழகாகத்தான் இருக்கிறது. அதில் ஒரு பக்கத்தில் நிஜமான தேன் கூட்டையுமே வைத்துக்கொண்டிருக்கிறார்களே இது எந்தத் தேசத்தில் தெரியுமா?



6. இந்தப் பெண் எதையோ தூக்கிக் கொண்டு போகிறாரே அது என்ன? ஏதாவது வேறு மிட்டாய்க் கூடையா? அல்லது என்ன வியாபாரப் பொருள் அதனுள் இருக்கிறது?

போஸ்ட் கார்டு போட்டி

முடிவுகள்

✲

'நான் மந்திரியானால்?' தலைப்பு உங்கள் கற்பனைக்கு நிறைய வேலை கொடுத்து இருக்கிறது. நீங்கள் மந்திரியாகி உங்கள் எண்ணப்படியெல்லாம் நடக்குமானால் பாரத நாட்டில் ராம ராஜ்யமே நடக்கும். குறிப்பாக ஒருவருக்கு மட்டுமே பரிசு அளிக்கும்படி இந்தத் தலைப்பில் யாரும் எழுதவில்லை. ஆகவே, இங்கு பிரசுரமாகியுள்ள குழந்தைகள் அனைவருக்கும் இந்த இதழ்க் கோகுலத்தைப் பரிசாக அனுப்புகிறோம்.

— ஆசிரியர்

✲



நான் மந்திரியானால்....

✿ கோயில்களை இழிவுபடுத்துவதைத் தடுப்பேன்.

உமாமகேசுவரி, மதுரை - 10
வயது ஒன்பது

✿ பள்ளித் தேர்வில் தோறாதவர்களுக்கு இலவசக் கல்விச் சலுகையை எடுத்து விடுவேன்.

உதயசங்கர், சென்னை — 23

✿ சாதிகளை ஒழிப்பேன்.

முரளிகிருஷ்ணன், வீரகனூர்
வயது பன்னிரண்டு

✿ எதிர்க் கட்சியினருக்கு மதிப்பளித்து நாட்டு நலனுக்காகப் பாடுபடுவேன்.

சி. ஸ்ரீதர், போத்தனூர்
வயது பதினாறு

✿ இந்தியநதிகளை இந்தியா முழுமைக்கும் பயன்படும்படியான ஏற்பாட்டைச் செய்து விவசாயத்தைப் பெருக்குவேன்.

பி. கே. ஜமீல் அஹமது, பெரியகுப்பம்

✿ சிகரெட் குடிப்பவர்களைத் தண்டிப்பதோடு சிகரெட் தொழிற்சாலைகளையும் மூடும்படி செய்வேன்.

சி. என். ராமன், மதுரை
வயது பதின்மூன்று

✿ திருபர்களைச் சந்திப்பதையும் புகைப்படம் எடுத்துக் கொள்வதையும் நிறுத்துவேன்.

எஸ். காசிவிஸ்வநாதன், கோவை
வயது பதினைந்து

✿ கள்ளக் கடத்தல்காரர்களுக்கு விசாரணை இல்லாமல் மரண தண்டனை விதிப்பேன்.

டி. சதாசிவம், சென்னிமலை
வயது பதின்மூன்று

✿ வெளிநாட்டில் வாழும் நம் விஞ்ஞானிகளை வரவழைத்து அவர்களுக்குத் தேவையானவற்றை அளித்து நம் நாட்டுக்காகவே பாடுபடச் செய்வேன்.

இ. பொற்செல்வி, சென்னிமலை
வயது பதினாறு

✿ லஞ்ச ஊழல்களைத் தடுக்கத் தக்க நடவடிக்கை எடுப்பேன்.

ஆர். பழனீஸ்வரி, மதுரை
வயது பன்னிரண்டு

● கிராம மக்களுக்கு ஊக்கமளித்து உணவு உற்பத்தியைப் பெருக்கச் செய்வேன்.

என். சரஸ்வதி, பம்பாய்
வயது பதின்மூன்று

● வரதட்சிணைக் கொடுமையை ஒழிப்பேன். மீறினால் கடும் தண்டனை கிடைக்க வழி செய்வேன்.

ஆர். ஆர். பொன்னு, கோவில்பட்டி
வயது பதினைந்து

● விளைச்சல் நிலங்களை வீட்டு மனைகளாக மாற்றும் கொடுமைக்குத் தடை விதித்து விவசாயம் பெருக வழி காண்பேன்.

ஜேம்ஸ் ஜெயசிங், நாகர்கோயில்
வயது பன்னிரண்டு

● சென்னை நகரைச் சிங்கப்பூர் நகரம் போலச் சுத்தமாக வைத்திருக்கப் பாடுபடுவேன். எல்லாரும் கல்வி கற்க வேண்டும் என்று சட்டமும் திட்டமும் கொண்டு வருவேன்.

ஜெ. ராஜேந்திரன், கரூர்
வயது பதினாறு

● மீண்டும் ஹிந்தியைப் பள்ளியில் ஒரு பாடமாக வைப்பேன்.

பி. எஸ். ராஜா, ஆத்தூர்
வயது பன்னிரண்டு

● வாழ்க்கைக்கு உதவாத இப்போதுள்ள கல்வி முறையை மாற்றித் தொழிலோடு இணைந்த கல்வி கற்பிக்க முயல்வேன். ஆர். ராதா, கூறைநாடு
வயது பன்னிரண்டு

● வரதட்சிணைக் கொடுமையை ஒழிக்க முயற்சி செய்வேன்.

பி. நிர்மலா, சென்னை - 10
வயது பதினைந்து

● சுகாதாரத்தில் கவனம் செலுத்தி, ஆரோக்கிய வாழ்வுக்கு வழி வகுப்பேன்.

டி. கே. குமாரசாமி, தர்மபுரி



● உழைப்பாளிகளைக் கௌரவிக்கும் திட்டங்களை வகுப்பேன்.

ஆர். பி. மாலா, லால்குடி
வயது பத்து

● பதினாறு வயது நிரம்பிய ஒவ்வொருவருக்கும் கட்டாய ராணுவப் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்வேன்.

கிருபாவதிதேவநேசம், மதுரை
வயது பதினைந்து

● பள்ளிகளில் காலை, மாலை, இடைவேளையின் போது ஆளுக்கு ஒரு சாக்லேட் தர வேண்டும் என்று முதல் உத்தரவு போடுவேன். பாட்டிகளிடம் காசிருப்பதில்லை. இருந்தால் பேரன்களுக்கு ஏதும் வாங்கித் தருவாள். ஆகவே, ஒவ்வொரு பாட்டிமார்களுக்கும் மாதம் நூறு ரூபாய் சர்க்கார் அனுப்பும்படி உத்தரவு போடுவேன்.

ந. ராமமூர்த்தி, இராசிபுரம்
வயது பத்து

● சிறு வயதில் நான் பட்ட இன்னல்களை என் ஆட்சியில் மக்கள் அனுபவிக்க நேராவண்ணம் பார்த்துக் கொள்வேன்.

பெ. நா. சாருமதி, இராணிபேட்டை.
வயது பதினாறு

● உழைக்காத சோம்பேறிகளுக்குத் தண்டனை கொடுப்பேன்.

ந. ராமலிங்கம், கடலூர்
வயது பதினைந்து

● விவசாயிகள் அறுவடைக்குப்பின் வேலையின்றி இருக்கிறார்கள். அந்தக் காலத்தில் அவர்களுக்கு வருவாய் தரும் கைத் தொழில்களைச் செய்யத் திட்டம் வகுப்பேன்.

ஜி. சம்பத்குமார், கோவை
வயது பதினாறு

"டம் டம்" வண்டி

கஸ்தூரி



டம் டம் வண்டி
டமார மடிக்கும் வண்டி
கூண்டு வைத்த வண்டி
கூலி இல்லா வண்டி

சக்க ரங்கள் உண்டு
சகடை அச்சும் உண்டு
பாருக் குச்சின் மேலே
மூக்க ணையும் உண்டு

டல வர்ணக் கலரில்
பள பளக்கும் கூண்டு
பாலர் களின் கண்ணில்
ஜாலம் செய்யும் கூண்டு.

மாடு இல்லா வண்டி
கேடு செய்யா வண்டி
மகிழ்ச்சி யாக இழுக்க
சுழித்து ஓடும் வண்டி.


உள்ளுக் குள்ளே டமாரம்
தள்ளும் போது அடிக்கும்
துள்ளித் துள்ளி ஓட
மெள்ள வரும் வண்டி.

எழுபத் தைந்து காசில்
எளிமை யான வண்டி
ஏதும் கவலை யின்றி
இன்ப மாக இழுப்போம்.





மீண்டும் வருமா?



அன்றொரு நாள் ஆடுகையில்
நான் இழந்த பந்து —
பின்னொரு நாள் தேடுகையில்
மீண்டு வந்த துண்டு !

அன்றொரு நாள் பாடுகையில்
அடி மறந்த பாட்டு —
பின்னொரு நாள் நினைவினிலே
மீண்டும் வந்த துண்டு !

அன்றொரு நாள் போட்டியிலே
நான் இழந்த நண்பன் —
பின்னொரு நாள் சேர்ந்திடவே
மீண்டும் வந்த துண்டு !

அன்றொரு நாள் சோம்பலிலே
நான் இழந்த காலம் —
என்னருமை வாழ்வினிலே
இன்றொரு நாள் வருமோ ?

தம்பி சீனிவாசன்

8. எடுத்து வைத்தாலும் கொடுத்து வைக்க வேண்டும்

''ஈதலும் கணவனும் நேர்படினும் தத்தம் விதியின் பயனே பயன்''

என்பது ஒளவையார் திருவாக்கு.

ஒருவருக்கு காமதேனுவும் கற்பக மூமே கிடைத்தாலும் நலம் பெற இயலாது. பூர்வ புண்ணியம் இருந்தால் தான் சுகப்பட முடியும். இந்த உண்மையை அடியில் கண்ட வரலாறு நமக்கு உணர்த்துகின்றது.

ஒருவன் பரம மூடனாக இருந்தான். அவனுக்கும் அறிவுக்கும் இடைவெளி ஆயிரம் மைல். வறுமையாகிய சிறுமையால் வாடினான். வயிற்றுப் பிழைப்புக்காக அயலூர் போக எண்ணி ஒரு காட்டு வழியே சென்றான். பசியாலும் தாக விடாயாலும் களைத்து இளைத்தான். வழியில் ஓர் அழகிய மரத்தைக் கண்டான். அம்மரத்தில் மலர்ந்திருந்த மலர்களின் - வாசனை வெகு தூரம் வீசியது. அது கற்பக மரம். அந்த மூடன் அதனைக் கற்பகத் தரு என்று அறிந்தானில்லை.

கற்பகத்தின் நிழலில் அமர்ந்தான். கற்பகத் தரு நினைத்ததை வழங்கும் இயல்புடையது. அவன் ''குடிக்கத் தண்ணீர் இருந்தால் நல்லது'' என்று எண்ணினான். அந்த விநாடியில் தங்கக் குவளையில் குளிர்ந்த நறுந் தண்ணீர் அவனிடம் வந்தது. அவன் ''ஆ'' என்று ஆச்சரியம் அடைந்தான். சிறிது தண்ணீரைக் குடித்தான்.

''பசி காதை அடைக்கின்றது. உணவு உண்டு நீர் குடித்தால் நன்றாக இருக்குமே'' என்று நினைத்தான். உடனே தங்கத் தட்டில் பிச்சியரும்பு போன்ற பச்சரிசி அன்னம், புத்துருக்கு நெய்; பருப்பு, பச்சடி, கிச்சடி, குழம்பு, விளாம் பழ ரசம், பால் பாயசம், லட்டு, வடை அந்நாசிப் பழம், மோர்க் குழம்பு, கட்டித் தயிர், ஆவக்கா மாங்காய் ஊறுகாய் முதலியன எல்லாம் வந்தன.

இவற்றை வயிறு புடைக்க உண்டான். உணவு அதிகமானால் உறக்கம் வரும்.

''படுக்கப் பாய் வேண்டும்'' என்று எண்ணினான். உடனே ஒரு பட்டுப்பாய் வெல்வெட்டுத் தலையணையோடு வந்தது.

''கீழே படுத்தால் அட்டை, தரேள், ஓணான் முதலியன வருமே. உயர்ந்த கட்டில் இருந்தால் சுகமாக இருக்குமே'' என்று நினைத்தான். உடனே ஸ்பிரிங்குக் கட்டில் எட்டடி அகலம், எட்டு அடி நீளம், வெல்வெட்டுப் பஞ்சு மெத்தை நான்கு தலையணைகள், பட்டுப் போர்வைகள் வந்தன.

கட்டிலில் ஏறிப் படுத்தான். அந்த மட்டில் கண்ணை மூடிக் கடவுளைத் தியானித்து உறங்கலாம்தானே? அவன் எடுத்து வைத்தும் கொடுத்து வைக்காதவன்.


''ஆ! எத்தனை அழகிய தந்தக் கட்டில்! இது யார் தந்த கட்டில்? இவ்வளவு விசாலமான கட்டிலில் தனியே படுக்கின்றோமே..'' என்று எண்ணினான்.

உடனே பத்தொன்பது வயதுள்ள ஒரு பெண். அன்ன நடை, மின்னலிடை, மான் விழி, தேன் மொழி, தங்க நிறம்—இப்படிப்பட்ட அழகிய பெண்மணி தோன்றினாள்.


அந்த மடையன் 'இது பூதமோ?' என்று எண்ணினான். உடனே அவள் பூதமாக ஆனாள். ''என்னை விழுங்கி விடுமோ?'' என்று எண்ணினான். பூதம் அவனை விழுங்கி விட்டது!

அறநெறி

திருமுருக கிருபானந்தவாரியார்



தெரியுமா?



1863. மிக வேகமாக ஓடக்கூடிய மின்சார ரயில் எந்த நாட்டில் உள்ளது? ஜப்பான் என்று சொல்கிறவர்களுக்கு மார்க் கிடைக்காது.

1864. நம் நாட்டில் ரூபாய் நோட்டுக்களும், தபால் தலைகளும் எங்கு தயாரிக்கப்படுகின்றன தெரியுமா?

1865. சந்திர மண்டலத்தில் 1966 ஜூன் 2ந் தேதி வெற்றிகரமாகத் தரை இறங்கிய விண்வெளிச் சாதனத்தின் பெயர் தெரியுமா?

1866. ஒரு காலனுக்கு எத்தனை லிட்டர்?

1867. தற்போது உலக பாங்கியின் தலைவர் யார்?

1868. பாரதத்தில் இன்னமும் டிராம் வண்டிகள் எந்த நகரத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன?

1869. மன்னர் மகேந்திராவுக்குப் பிறகு நேபாள சிங்காதனத்துக்கு வந்தவரின் பெயர் என்ன?

1870. பிரிட்டிஷ் பார்லிமெண்டின் எதிர்க் கட்சித் தலைவரை ஒரு விநோதமான பெயரால் அழைப்பார்கள். அது என்ன?

1871. முதன் முதலாக இந்தியாவில் தபால்களை விமானம் மூலம் எடுத்துச் செல்ல ஆரம்பித்தது எந்த ஆண்டில்?

1872. அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுள் எங்கு மிக அதிகமான புத்தகங்கள் உள்ளன?

1873. எகிப்தில் உள்ள பிரமிட்டுகள் எதற்காகக் கட்டப்பட்டன?

1874. ஹாம்ப்டன் கோர்ட் என்பது இங்கிலாந்தின் மன்னர்கள் வாழ்ந்த அரண்மனையாக நெடுங்காலம் இருந்து வந்தது. இந்த அரண்மனையைக் கட்டுவதற்குக் காரணமாக இருந்தவர் யார்?

1875. ஆண்டர்சன் ஷெல்டர் என்றால் என்ன என்று தெரியுமா?

1876. பிரிட்டிஷ் அரச குடும்பங்களின் விலைமதிப்பற்ற ஆபரணங்கள் இங்கிலாந்தில் எங்கு உள்ளன?

1877. புகழ் பெற்ற விக்டோரியா ராணி வெயிட் (wight) தீவிலுள்ள தமது இல்லத்திலேயே தம் வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்தார். இந்த அரண்மனைக்குப் பெயர் என்ன?

1878. பெண்டகன் என்பது என்ன? எந்த நாட்டில் உள்ளது?

1879. பிரிட்டிஷ் தீவுகளில் புறக்கத்திலுள்ள மிகப் பெரிய கோட்டை அரண்மனை எது தெரியுமா?


1880. உலகிலேயே மிகப் பெரிய குடியிருப்பு அரண்மனை (Residential Palace) எது?

1881. சீனாவின் புகழ் பெற்ற பெரும் சுவர் எந்தச் சீன மன்னரின் ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்டது?

1882. ஸ்காட்லாந்தில் உள்ள மன்னரின் அரண்மனைக்குப் பெயர் என்ன?

1883. ராஸ் கடல் (Ross Sea) எங்குள்ளது?

தெரியுமே!



விடைகள்: 1863. பிரான்ஸ் நாடுதான் இந்த ரிகார்டைப் பெற்றுள்ளது. மணிக்கு 329 கி. மீட்டர் வேகம். 1864. நாசிக்கில் உள்ள செக்யூரிடி அச்சகத்தில். 1865. ஸர்வேயர்-1. 1866. காலனுக்கு 4.53 லிட்டர்கள். 1867. ராபர்ட் மாக்நமாரா. 1868. கல்கத்தா நகரில். 1869. மன்னர் வீரேந்திரா. 1870. நிழல் பிரதமர் (Shadow Prime Minister) என்று. 1871. பிப்ரவரி 18ந் தேதி, 1911ம் ஆண்டு. 1872. கலிபோர்னியா சர்வ கலாசாலை - 9.9 மிலியன் புத்தகங்கள். 1873. பண்டைய எகிப்திய மன்னர்களான பாரோஸ்களின் கல்லறைகள் இவை. 1874. கார்டினல் உல்ஸி. 1875. இரண்டாவது உலக யுத்தத்தின்போது குண்டு வீச்சிலிருந்து தப்புவதற்காகக் கட்டப்பட்ட பதுங்குமிடங்களுக்குப் பெயர். 1876. டவர் ஆஃப் லண்டன் என்னும் கட்டடத்தில். 1877. ஆஸ்போர்ன் ஹவுஸ் என்று பெயர். 1878. அமெரிக்காவிலுள்ள வாஷிங்டனில் அமெரிக்கப் பாதுகாப்பு இலாகாவின் தலைமையகம் (US. Defence Force Head Quarters) இங்குள்ளது. 1879. விண்ட்ஸர் காஸில். 1880. வாடிகன். 1881. ஷி ஹுவாங் டி (Shih Huang Ti) காலத்தில். 1882. ஹோலிரூட் ஹவுஸ் (Holy Rood House) எடின்பரோவில் உள்ளது. 1883. ராஸ் கடல் அண்டார்டிக் கடலின் ஒரு பகுதி. தென் விக்டோரியா நிலப் பரப்புக்கும் ஏழாம் எட்வர்டு நிலப்பரப்புக்கும் இடையிலுள்ள கடல் இது.

டினோசார்களின் அழிவு

○ கிருஷ்ணவேணி ○

பெரிய உடம்பும் சின்ன மூளையுமாக வாழ்ந்த டினோசார்களில் **ஸ்டெகோசாரஸ்** (*Stegosaurus*) என்பது ஒரு வகை. இதன் மூளை சொட்டைப் பாக்கின் அளவே இருந்தது. ஆனால், உடலோ மிகப் பெரியது. இதன் உடலில் பலமான கவசங்கள் இருந்தன. இந்தத் தற்காப்புக் கவசங்கள் இதன் தலையில் இல்லை. இந்த மிருகத்தின் கழுத்திலிருந்து ஆரம்பித்து முதுகு வழியாக வால் வரை இரட்டை வரிசையாகப் பெரிய பெரிய தட்டுக்களைச் செருகி வைத்தது போல் இருந்தன இந்தக் கவசங்கள். எலும்பு போன்று உறுதியாகவும் வாளின் முனை போலக் கூர்மையாகவும் இருந்தன இந்த 'பிளேட்டுக்கள். இது மட்டுமா ? வாலில் காண்டாமிருகத்தின் கொம்புகளைப் போல் நான்கு கொம்புகள் நீட்டிக் கொண்டிருந்தன. இந்த வாலை இது அடிக்கடி இப்படியும் அப்படியும் ஆட்டிக் கொண்டே இருக்கும்- யுத்த களத்தில் வீரன் முள்ளாலான கதாயுதத்தைச் சுழற்றிக்கொண்டிருப்பது போல.

ஸ்டெகோசாரஸ் என்றால் போர்வை போர்த்திய பல்லி — கவர் லிஸர்டு— என்று பொருள். இன்றைய டாங்கி எப்படி நகர்ந்து செல்லுமோ அப்படி இந்த ராட்சத மிருகம் ஊர்ந்து நடந்தது. ஆனால் டாங்கி போல இருந்தாலும் இது மற்ற மிருகங்களைத் தாக்கும் மூர்க்க குணமுடைய டினோசார் இல்லை. இது ஒரு வெஜிடேரியன்! அதாவது தாவரங்களை உண்டு வாழ்ந்த மிருகம். பயங்கரமும் அருவெறுப்பும் உள்ள இத்தகைய உருப்புக்கள் விரோதிகளிடமிருந்து தற்காத்துக் கொள்ளத்தான். மாமிசம் உண்ணும் டினோசார்களினால் ஸ்டெகோஸாரஸைச் சுலபமாகக் கொன்று தின்று விட முடியாது.

இந்த மிருகத்தினால் வேகமாக ஓடி முடியாது. இதைத் தாக்க வரும் விரோதிகளை இது தன் கூரான கொம்பு உடைய வாலை இப்படியும் அப்படியும் வீசி விரட்டிவிடும். ஸ்டெகோசாரஸின் இன்னொரு விசித்திர அமைப்பு இதன் முன்னங் கால்கள் குட்டையாகவும், பின்னங் கால்கள் உயர்ந்தும் உறுதியாகவும் இருந்ததுதான். உறுதியான பின்னங் கால்களினால் மட்டுமே நகர்ந்து வாழ்ந்த டினோசார்களின் வழித்தோன்றல்தான் இது என்பது விளங்குகிறது. ஆனால் ஸ்டெகோசாரஸ் நான்கு கால்களினாலும் நடந்தது. இதன் இடுப்புப் பகுதி உயர்ந்தும் கழுத்துப் பகுதி தாழ்ந்தும் உள்ள நிலையில் இதனால் தரையிலுள்ள மிகச் சிறிய தாவரங்களையும் பற்றி இழுத்துச் சாப்பிடமுடிந்தது. ஆனால் இது நகரும் போது பார்க்க விகாரமாக இருக்கும்.

ஸ்டெகோசாரஸுக்கு இரண்டு இடத்தில் மூளைகள் இருந்தன என்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கும். வழக்கமான மூளை தலையில் — இது மிகச்

ஸ்டெகோசாரஸ்



சிறியது — இருந்தது. இந்தச் சின்ன மூளை இதன் தாடைகளை இயக்கவும் முன்னங் கால்களை நடக்க வைக்கவுமே பயன்பட்டது. இடுப்புக்கு அருகே வாலின் ஆரம்பத்தில் முள்ளெலும்பில் ஒரு புடைப்பு இருந்தது. இது இம்மிருகத்தின் இரண்டாவது மூளையாக விளங்கியது. பெரிய வாலேயும் பின்னங்கால்களையும் இந்த மூளை இயக்கியது. இது தலையிலிருந்த மூளையைவிடப் பல மடங்கு பெரியதாக இருந்தது. இன்று நம் மூளை செய்யும் சிந்தனையை அந்த மூளைகள் செய்யவில்லை. உடலை இயக்கும் உத்தரவுகளை இடவே இவற்றின் மூளைகள் செயல்பட்டு வந்தன.

இதற்கு முன்பு வாழ்ந்த டினேசார்களிலிருந்து ஸ்டெகோசாரஸ் கொஞ்சம் முன்னேற்றம் அடைந்திருந்தது. ஏனென்றால், டினேசார்களின் கடைசி காலத்தில் வாழ்ந்த மிருகம் இது. சதுப்பு நிலங்களைத் தவிர உயர்ந்த காய்ந்த நிலப் பகுதிகளில் வளர்ந்த உறுதியான தாவரங்களையும் காய்ந்த தாவரங்களையும்கூட ஸ்டெகோசாரஸ் கடித்து அரைத்துத் தின்னும் வல்லமை உடையதாக இருந்தது.

இதே காலத்தில் இன்னும் எத்தனையோ ராட்சத டினேசார்கள் வாழ்ந்து வந்தன. **பிராக்கியோசாரஸ்** என்பது இடியோசைப் பல்லியைப்போல் தாவரப் பட்சிணியானலும் அதைவிட உருவத்தில் பெரியது. ஐம்பது டன்கள் வரை இருந்தது இதன் நிறை. புராண்டோசாரஸைப் போலவே **டிடானேசாரஸ்** என்று ஒரு டினேசார், டிரைஸரொடாப்ஸ் மாதிரியே — **ஸ்டைரகோஸாரஸ்** என்று ஒரு டினேசார். இதன் கழுத்தில் அதைவிட விசேஷமான எலும்பு போன்ற கவசம் இருந்தது. **காசிதோஸாரஸ்** என்பது வாத்து அலகு போன்ற வாயுடைய இன்னெரு டினேசார். இதன் தலையில் புராதன கிரேக்க வீரனின் கிரீடம் போன்ற ஒரு வகை அமைப்பு இருந்தது. **பாரஸாலோபஸ்** இன்னெரு வாத்து மூக்கு டினேசார். இதற்குக் கழுத்துக்குக் கீழே விநோதமான மடிப்புக்கள் இருந்தன. **ஸொரடோஸாரஸ், டினேடான்** ஆகியவை மாமிசப் பட்சிணிகள். மிகப் பெரியவையும்கூட.

இந்த ரெப்டைல்கள் எல்லாம் உண்மையிலேயே பிரும்மாண்டமானவைதான். ஆனல் உலகில்வாழ்ந்த பண்டைய மிருகங்களெல்லாம் இவையே பெரியவை என்று கூறிவிட முடியாது. எந்த டினேசாரும் இன்றைய நீலத் திமிங்கிலத்தின் அளவே இருந்தன.

அறுபது மிலியன் ஆண்டுகளுக்கு முன்னல் இந்த டினேசார்கள் அழிந்து மறையலாயின. ரெப்டைல்களின் காலகட்டமும் ஒரு முடிவுக்கு வந்தது. 150 மிலியன் ஆண்டுகள் இவ்வுலகை ஆட்சி செலுத்தி வந்த டினேசார்கள் எல்லாம் ஏன் இறந்து அழிந்தன என்பது ஒரு மர்மம்தான். பல டினேசார்களுக்கு அவற்றின் பூதாகாரமான உடலுக்குத் தகுந்த மூளை இல்லாததும் இவற்றின் அழிவுக்கு ஒரு காரணமாகும். சின்ன உடலும் பெரிய மூளையுமாக இருந்திருக்குமானல் இவை ஒரு வேளை அழியாமல் இருந்திருக்கலாம். ஆனலும் இத்தனை நீண்ட காலத்துக்கு இவைகளால் எப்படி வாழ்ந்திருக்க முடிந்தது? பூமியின் நிலை, பல மிலியன் ஆண்டுகளுக்கு மாறுமலே இருந்ததும் இவை வெகுகாலம் ஆட்சி புரிய முடிந்ததுக்குக் காரணம். பூமியின் சூழ்நிலை மாறியபோது அதற்கு ஏற்பத் தங்களை மாற்றிக் கொள்ளுவதற்கான யோசனை (மூளை) இவைகளுக்கு இல்லாமல் போகவே டினேசார்கள் அழிந்தன. நீர் நிலைகளும், சதுப்பு நிலக் குட்டைகளும் வற்றிக் காய்ந்து வறண்ட பகுதிகளாக மாறியதும் டினேசார்களின் அழிவுக்குக்

ஸ்டைரகோசாரஸ்



காரணம். டினோசார்களின் மிகப் பெரிய உடலைத் தாங்கி நின்ற நீர் நிலைகள் மறையவே இவற்றால் உயிர் வாழ முடியவில்லை. முக்கிய உணவான நீர்த் தாவரங்கள் குறையவே தாவர பட்சிணிகளான டினோசார்களுக்கு ஆகாரம் இல்லாமல் போயிற்று. தாவரங்களை உண்டு வாழ்ந்த டினோசார்களின் எண்ணிக்கை குறையவே இவற்றை உண்டு வாழ்ந்த டினோசார்களின் பாடும் திண்டாட்டமாகியது.

பருவ நிலைகளின் மாற்றம் டினோசார்களுக்குப் பாதகமாக இருந்தது. இன்றைய ரெப்டைல்களைப் (ஊர்வன) போலவே அன்றைய டினோசார்கள் குளிர் ரத்தமுடையன. சூழ்நிலையின் கதகதப்பு எதுவோ அதுவே அவற்றின் உடல் கதகதப்புமாக இருந்தது. திடீரென்று பூமியில் பல பகுதிகளின் சீதோஷ்ண நிலை மிகக் கடுமையான சீதளமாகியது. இந்தப் பகுதிகளில் வாழ்ந்த டினோசார்களினால் தங்கள் உடல் நிலையைக் கதகதப்பாக வைத்துக் கொள்ள முடியவில்லை. கடுமையான குளிர் இவற்றைச் செயலற்றதாக்கியது. அதுவும் தவிர இந்தக் குளிரில் டினோசார்களின் முட்டைகள் பொரிய வாய்ப்பில்லாமல் போயிற்று. டினோசார்களின் முட்டைகளைத் தின்னும் பழக்கம் சில டினோசார்களிடையே பெருகியதும் இவற்றின் அழிவுக்கு ஒரு காரணம். புதிய இனமான மம்மல்கள் தோன்றியதும் இந்த டினோசார்களின் மறைவுக்குக் காரணமாகும்.

○○○○○○○ முதல் பக்கத்துப் படங்களுக்கான விளக்கம் ○○○○○○○

1. ஆர்மீனியர்களின் கல்லறைகளின் அமைப்புத்தான் இது. ஆட்டுக்குட்டி போன்ற தோற்றம். ஆட்டுக்குட்டி கிறிஸ்துவின் அடையாளமாயிற்றே!

2. இன்று வானத்திலே பறக்கும் விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் 'ஆண்டி ஆர் கிராஃப்ட் கன்' ஆயுதம் தோன்றுவதற்கு முன்னோடியாக விளங்கியது இந்த அமைப்புள்ள பீரங்கிதான். முப்பத்தெட்டு ஆண்டு காலம் பசிபிக் கடலிலே மூழ்கிக்கிடந்த பிறகு வெளியே எடுக்கப் பட்டது. ஏழு பாரல்களைக் கொண்ட இது ஒரே சமயத்தில் இந்த ஏழு முனைகளாலும் வெடிக்கக் கூடியது. வேண்டிய உயரத்துக்குத் தூக்கவோ இறக்கவோ வசதியும் உண்டு.

3. நேபாள நாட்டில் உள்ள கூர்க்காக்களின் கத்தி இது. இதன் பெயர் குக்ரி (*Kukri*).

4. மேற்கு ஆப்பிரிக்காவில் வாழும் பௌலா இனத்துப் (*Foulah Tribe*) பெண்களின் தலையலங்காரத்தில் நிஜயான தேன் கூடும் இடம் பெறுகிறது. நடமாடும் தேன்கூடு என்று கூறலாமா இதை?

5. பவேரியா நாட்டில் வால்டுஸாஸன் (*Waldsassen*) என்னுமிடத்தில் உள்ள சர்ச் இது. இதன் பெயர் சர்ச் ஆஃப் தி டிரினிடி. இதில் எல்லாமே மூன்று மூன்றாக அமைந்திருப்பதே இதன் விசேஷம். இந்தச் சர்ச்சுக்கு மூன்று ஸ்தூபிகள். அதே மாதிரி மூன்று சிறு ஸ்தூபிகள். ஒவ்வொரு ஸ்தூபியிலும் மூன்று மூன்று சாய் கூரைப் பலகணிகள் (*Dormer*) உள்ளன. இந்த மாதா கோவிலில் மூன்று பெரிய சிலுவைகளும் மூன்று சிறிய சிலுவைகளும் உள்ளன. இதற்கு மூன்று மேற்கூரைகள். ஒவ்வொரு மேற்கூரையிலும் மூன்று மூன்று காற்றுப் போக்கிகள். இந்தப் பெரிய கட்டிடம் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் மூன்று கதவுகளும் மூன்று ஜன்னல்களும் உள்ளன. அதே மாதிரி மூன்று பெரிய ஸ்தூபிகளும் மூன்று சிறிய ஸ்தூபிகளும் மூன்று பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன. மாதா கோயிலின் உள்ளே பிரார்த்தனைக் கூடங்கள் மூன்று உள்ளன. மூன்று மாடிப்படிகளும், மூன்று பாதைகளும், மூன்று விளக்குகளும், தேவதைச் சிலைகள் வைப்பதற்கான சுவர் மாடக் குழிகள் (*Wiches*) மூன்றும் மதிலிடை வளைவில் மூன்று ஜன்னல்களும், கன்னி மேரியின் சிலை மூன்றும் —இப்படி இந்தக் கட்டிடத்தின் அமைப்பில் ஒரே மூன்று மயம். இதைக் கட்டியவர் ஜார்ஜ் டீன்ட்ஸோஃபர் (*George Dientzhofer*) இவர் குடும்பத்தில் இவர் மூன்றாவது கட்டிடக் கலை நிபுணர் இதைக் கட்டி முடிக்க இவருக்கு 33 மாதங்கள், 33 வாரங்கள், 33 நாட்கள் ஆயின. செலவான தொகை என்ன தெரியுமா? பவேரிய நாணயப்படி 33,333 ப்ளாரின்களும் (*Florins*) 33 க்ரூஸர் (*Kreuzer*)களும். அப்பாடா! போதுமா மூன்று!


6. இத்தாலியில் உள்ள பீமோண்டி (*Piemonte*) என்ற மலைப் பகுதியில் வாழும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளையே தொட்டிலோடு இப்படித் தலையில் சுமந்து செல்கிறார்கள். வெகு தூரப் பிரயாணமானாலும் கொஞ்சமும் களைப்பின்றி இப்படித் தங்கள் செல்வங்களைச் சுமந்து செல்வது இத்தாய்மார்களின் வழக்கம்.

அன்றைக்கு பாஷ்ய பட்டர் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு கவலை தோய்ந்து காணப்பட்டார். அதைப் பார்க்கவே யமுனைத்துறைவனுக்குக் கஷ்டமாக இருந்தது.

பாஷ்ய பட்டர் என்பவர் எல்லாக் கலைகளையும் சாஸ்திரங்களையும் கற்பிக்கும் ஆசிரியர். அவருடைய மாணவர்களில் தலைசிறந்தவன் யமுனைத் துறைவன். பத்து வயதுக்குள்ளேயே அவன் மகா மேதாவியாக, கலைக் களஞ்சியமாக ஆகிவிட்டான். கடவுளேதான் அவனுடைய புத்தியில் புகுந்து கற்பிக்கிறார் என்றே பாஷ்ய பட்டர் கருதி அவனிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்.

பாஷ்ய பட்டரின் அருகே போய், ''ஸ்வாமி, தங்கள் துயரத்துக்கு என்ன காரணமெனக் கூறி அருளுங்கள். அதைத் தீர்த்து வைப்பது என் கடமை'' என்றான்.

அவனை ஆசிரியர் அன்புடன் தடவிக் கொடுத்து, ''கண்மணி! எனக்கு வந்துள்ள சோதனையைச் சின்னஞ் சிறுவனை உன்னால் தீர்க்க முடியாது. இருந்தாலும் விஷயத்தைச் சொல்கிறேன். பாண்டிய மகாராஜாவின் ஆஸ்தான வித்வானாக ஆக்கியாழ்வான் என்று ஒருவன் இருக்கிறான். 'வித்வத் ஜன கோலாகலன்' என்ற பட்டம் பெற்றவன் அவன். இந்தக் கோலாகலனை நினைத்தாலே வித்வான்களான நாங்கள் ஆலகால விஷத்தைக் கண்டாற்போல நடுங்குகிறோம். இந்த ஆக்கியாழ்வான் என்னைப் போன்ற வித்வான்களிடமிருந்து கடுமையான வரி வசூலித்து வருகிறான். குழந்தாய் யமுனா! நான் இந்த வரியைச் செலுத்த வேண்டிய கெடு வந்து விட்டது. கையிலோ செல்லாக் காசும் இல்லை. வரி கொடாதவர்களை இழுத்துச் செல்வதற்காக அவனுடைய ஆட்கள் வருவதாகக் கேள்வி. ஈவு இரக்கமே இல்லாத ஆக்கி ஆழ்வான் எனக்கு என்ன சித்திரவதை விதிப்பானோ, எப்படி மானபங்கப் படுத்துவானோ என்றே கதி கலங்கி இருக்கிறேன்'' என்றார்.



ஆளவந்த பாலன்

ரா. கணபதி

யமுனைத் துறைவனோ பளிச்சென்று ''ஐயனே, இதற்காகவா தாங்கள் இப்படித் துயரப்படுகிறீர்கள்? நான் என் தகப்பனாரிடம் சொல்லி, எங்கள் சொத்தையெல்லாம் விற்று தங்க

னுக்கு விதிக்கப்பட்ட வரித் தொகையைச் செலுத்திவிடச் செய்கிறேன்'' என்றான்.

அவனுடைய அன்பு, ஆசிரியருடைய உள்ளத்தை உருக்கி விட்டது. ''கண்ணே! உன் சின்ன உருவத்துக்குள் எத்தனை பெரிய மனம் இருக்கிறது! உன் தகப்பனாரான ஈச்வர பட்டரும் தாராள மனத்தோடு எனக்கு உதவக் கூடியவர் தான். ஆனால், குழந்தாய், உன் குடும்பமும் ஏழ்மையானதுதான் என்று நான் நன்றாக அறிவேன். உன் பாட்டனாராகிய நாதமுனிகள் பெருமானையே கண்ணால் கண்ட மகான் தான்; வைஷ்ணவத்தை வளர்த்த வள்ளலும்தான். ஆனாலும் ஆக்கியாழ்வான் எனக்கு வரியாக விதித்துள்ள பொன் முடிப்புக்கு அவர் எங்கே போவார்?'' என்றார்.


யமுனைத்துறைவன் இதைக் கேட்டுச் சோர்ந்து போனான். ஒரே நிமிஷந்தான் இந்தச் சோர்வு. மறு நிமிஷமே அவன் முகத்தில் உற்சாக ஒளி கொந்தளித்தது.

''ஸ்வாமீ! தாங்கள் இந்தச் சிக்கலை என் கையில் போட்டு விட்டு நிம்மதியாக இருங்கள். ஆக்கியாழ்வானின் ஆட்களையும் சரி, அந்த ஆக்கியாழ்வானையும் சரி, நானே ஒரு கை பார்த்துக்கொள்கிறேன்'' என்றான்.

''குழந்தாய்! ஆக்கியாழ்வான் மத யானை என்றால் நீயோ முயல் குட்டி. அவனை நீ எப்படிச் சமாளிப்பாய்? கருணையே தெரியாத அந்தப் பாவி உனக்கு பொல்லாத் தீங்கு செய்வான். வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு'' என்றார்.

''ஐயா, என்னைத் தடுக்காதீர்கள்.. பெருமாள் எனக்குத் துணை நிற்கிறார். பெருமாளோடு சேர்ந்து விட்ட என் தாத்தா எனக்குப் பக்கபலமாக இருக்கிறார். தாங்கள் என்னை என் வழி விட்டு விடுங்கள்'' என்று அழுத்தமாக கூறினான் யமுனைத் துறைவன்.

''சரி குழந்தாய்! இரணியகசிபுவிடமிருந்து பிரகலாதனைக் காத்த பகவானே உன்னையும் ஆக்கியாழ்வானிடமிருந்து காப்பாற்றட்டும்'' என்றார் பாஷ்ய பட்டர்.



ஆக்கியாழ்வானின் ஆட்கள் அட்டகாசம் செய்து கொண்டு பாடசாலைக்கு வந்தனர். அஞ்சா நெஞ்சனான யமுனைத் துறைவன் அவர்களின் எதிரே போய் நின்றான்.

மழலை மாறாத குரலில் ராஜ மிடுக்குடன் சொன்னான்: ''உங்கள் அதிபர் ஆக்கியாழ்வானுக்கு இங்கே செல்லாக் காசும் வரி கொடுப்பதற்கில்லை.. ஏனென்றால் அவரை நான் என்னைவிடப் பெரிய வித்வானாக மதிக்கவில்லை. சந்



தேகமிருந்தால் அவர் என்னோடு வாதத்துக்கு வரட்டும். எந்தக் கலையில் வேண்டுமாயினும், எந்த சாஸ்திரத்தில் வேண்டுமாயினும் என்னைக் கேள்வி கேட்கட்டும். நான் விடை சொல்லாவிடில் அவர் எனக்கு என்ன தண்டனை வேண்டுமாயினும் விதிக்கட்டும். நான் விடை கூறிவிட்டால் பிறகு அவரை நான் கேள்விகள் கேட்பேன். அவற்றுக்கு அவரால் விடை தர முடியாவிடில் அவர் ஆஸ்தான வித்வான் என்ற பதவியையும், வித்வத் ஜன கோலாகலன் என்ற பட்டத்தையும் மற்ற வித்வான்களிடம் வரி வாங்கும் உரிமையையும் துறந்து விடவேண்டும். விரைவில் சென்று அவரிடம் இவ்விவரங்களைச் சொல்லி அவரை விவாதத்துக்கு அனுப்பி வையுங்கள்!''

பச்சிளம் பிள்ளையின் வாக்கில் இருந்த கம்பீரத்தைக் கண்டு வந்த ஆட்கள் அயர்ந்து விட்டனர்.

ஆக்கியாழ்வானிடம் ஓடிச் சென்று, யமுனைத்துறைவன் கூறியதை அப்படியே ஒப்பித்தார்கள்.

'' என்ன, இந்தச் சிங்கத்தை எதிர்த்து ஒரு சிலந்தி போர் முரசு கொட்டுகிறதா?'' என்று பற்களை நரநரவென்று கடித்தான் வித்வத் ஜன கோலாகலன். ''சரி, இருந்தாலும் பண்டிதன் எவனும் விவாதத்துக்கு அழைப்பு வந்தால் அதை ஏற்கத்தான் வேண்டும். ஆனால் மகா மகா மகா வித்வானை நான் நேற்று முளைவிட்ட அந்தப் பயல் இருக்கு மிடத்துக்குப் போக மாட்டேன். அவனையே ராஜ சபைக்கு அழைத்து வாருங்கள். அங்கே வாதப் போர் நடக்கட்டும்'' என்றான்.

ஆட்கள் யமுனைத் துறைவனிடம் திரும்பிச் சென்று இவ்விஷயத்தைத் தெரிவித்தார்கள்.

''அப்படியா?'' என்று அலட்சியமாகக் கேட்டான் யமுனைத் துறைவன். ''தொலைகிறார், அந்த ஆக்கியாழ்வானும் வயதில் பெரியவர். அவர் இங்கே வராததை மன்னிக்கிறேன். ஆனால் என்னை ராஜசபைக்கு அவர் அழைக்கும் முறை மரியாதைப் பண்புக்குச் சற்றும் உகந்ததாக இல்லை. எனக்குப் பல்லக்கும் பரிவட்டமும் அனுப்பச் சொல்லுங்கள். நான் சிவிகை மீதேறியே வீதி பவனியாக வாத மண்டபத்துக்கு வருவேன்'' என்றான்.

இந்தத் தகவலை ஆட்கள் ஆக்கியாழ்வானிடம் கூறினார்கள். அவன் கொதித்தெழுந்தான்.

ஆனால் பாண்டிய மன்னன் அவனை அடக்கி, ''வாதம் என் சபையில் நடக்கப் போகிறது. வித்வான் என்று சொல்லிக் கொள்ளும் எவரையும் மரியாதையுடன் வரவேற்பது பாண்டிய குலப் பண்பு. எனவே, நான் அந்தப் பாலனுக்குப் பல்லக்கும் பரிவட்டமும் அனுப்பி வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்'' என்றான்.

அவ்விதமே சிவிகை அனுப்பப்பட்டது. அரசனின் புரோகிதர் யமுனைத் துறைவனுக்குப் பரிவட்டம் கட்டிப் பல்லக்கில் அமர்த்தினார்.

பல்லக்குப் புறப்பட்டது. சற்றும் கலக்கமின்றி இளவரசனைப் போல்

அதில் ஆரோகணித்திருந்தான் யமுனைத் துறைவன்.

ராணியின் அரண்மனை வழியாகப் பல்லக்கு வந்தது. மேல் மாடத்தில் அரசியோடு அரசனும் நின்று கொண்டிருந்தான்.

பல்லக்கில் இருந்த பாலனைப் பார்த்ததும் மன்னன் ராணியிடம், ''ஐயோ, பாவம்! தெய்வக் களை சொட்டும் இந்தப் பிள்ளைக்கு நானே பல்லக்கை அனுப்பி வைத்தேனே! கொடூர நெஞ்சனான ஆக்கியாழ்வான் பவனி வரும் இப்பிள்ளையை இன்னும் சிறிது நேரத்தில் வாதில் வென்று கொலைக் களத்துக்கு அனுப்பப் போகிறான்! அடடா, என்ன பரிதாபம்!'' என்றான்.

''ஒரு பரிதாபமும் இல்லை'' என்று ராணி தீர்மானமாகக் கூறினாள். ''இந்தக் குழந்தையை வெல்ல எவராலும் ஆகாது என்றே எனக்கு உறுதியாகத் தோன்றுகிறது. வாமனாவதாரம் செய்த பெருமாளைப் போலவே இக்குழந்தை என் கண்ணுக்குத் தோன்றுகிறது....'' என்றாள்.

''அசட்டுத்தனமாகப் பேசாதே!'' என்றான் பாண்டியன். ''நாடு முழுவதுமுள்ள மகாமேருவான பண்டிதர்களையெல்லாம் கண்டித்துத் தண்டித்து ஆஸ்தான வித்துவானாகியுள்ள ஆக்கியாழ்வான் இப்பிள்ளையைப்புயலில் சிக்கிய இலவம் பஞ்சாகத்தான் பிய்த்துப் பிய்த்துப் போடப் போகிறான்' என்றான்.

''ஒரு நாளுமில்லை. நான் பெருமாள் மேல் ஆணை வைக்கிறேன். இந்தப் பிள்ளை தோற்றால் நான் அரசி பதவியைத் துறந்து, உங்கள் வேலைக்காரிக்கு வேலைக்காரியாவேன்'' என்று சபதமிட்டாள் மகாராணி.

அரசன் கேலியாகவே நகைத்தான். ''நீ சொன்னாற் போலவே நான் எதிர்ச் சபதம் செய்தால் கற்பரசியான நீயே அதை ஏற்கமாட்டாய். எனவே வேறு ஒன்று சொல்கிறேன்: இப்பாலன் ஜயித்தால் பாண்டிய ராஜ்யத்தில் பாதியை இவனுக்கு நான் அளிப்பேன்'' என்று சத்தியம் செய்தான்.

ராஜ சபையில் வாதம் தொடங்கிற்று.


யமுனைத்துறைவனை ஏகத்தாளமாகப் பார்த்து எக்காளமிட்டான் ஆக்கியாழ்வான்.

''முளைத்து மூன்று இலை விடாத மூடப் பிள்ளையே! உன் பெயரையாவது உனக்கு எழுதத் தெரியுமா?'' என்று நையாண்டி செய்தான்.

''இங்கே நான் வீண் பேச்சுக்கு வரவில்லை. வித்வத் போட்டிக்கே வந்தேன். வினாக்கள் விடுக்கலாம்'' என்று மிடுக்குடன் கூறிச் சொடுக்குப் போட்டான் யமுனைத்துறைவன்.

அறிவுத்துறையின் அத்தனை கிளைகளிலும் அதி நுணுக்கமான கேள்விகளைச் சரமாரியாகப் பொழியலானான் வித்வத் ஜன கோலாகலன்.

என்னே விந்தை! சற்றும் சளைக்காமல் கணீர் கணீரென்று விடைகளை வீசினான் யமுனைத்துறைவன். ''ம்,



மேலே கேளுங்கள்'' என்று சவால் விடுத்து நின்றான்.

கேள்விக் கணை தொடுத்துச் சலித்து விட்டான் ஆக்கியாழ்வான். மிச்சம் மிகுதியின்றி அவனுக்குத் தெரிந்த அத்தனை விஷயங்களிலும் சிக்கலான கேள்விகள் கேட்டாயிற்று; புதிர், விடுகதைகள் போட்டாயிற்று. இனி கேட்பதற்கு எதுவுமே இல்லை.

சபையினர் அனைவரும் மூக்கில் விரல் வைத்து அமர்ந்திருக்க, கோலாகலம் போய்விட்ட வித்வத் ஜனகோலாகலன் ஈனசுரத்தில், ''இனி நான் கேட்பதற்கு எதுவும் இல்லை'' என்றான்.

சபையில் கூடியிருந்த வித்வான்கள் புளியம்பழம் உதிர்வதே போல் கரகோஷம் செய்தனர்.

ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது ஆக்கியாழ்வானுக்கு. ''இன்னும் பாதி மீதியிருக்கிறது. இனி இந்தப் பிள்ளை என்னைக் கேள்வி கேட்கட்டும். அவன் 'ஆம்' என்று சொல்லக்கூடிய எதையும் 'அன்று' என்று என் புத்தி கூர்மையால் நிரூபித்துக் காட்டுவேன். உதாரணமாக நெருப்புக்கு உஷ்ணம் உண்டு என்று அவன் சொன்னால் நான் தீக்கு வெப்பம் இல்லை, இல்லை, இல்லவே இல்லை என்று தர்க்கத்தால் நிரூபிப்பேன். அப்போது பாருங்கள் என் பிரதாபத்தை. இதே போல் நான் 'அன்று' என்றே விடை தர முடியும் என்று இவன் நினைக்கும் விஷயத்தில் 'ஆம்' என்று நிரூபிப்பேன். உதாரணமாக 'பனிக்கட்டி கொதிக்கிறது' என்று இவன் சொன்னால் நான் 'அன்று' என மறுக்கமாட்டேன். 'ஆம், பனிக்கட்டி கொதிக்கிறது' என்று தர்க்கத்தால் நிருபணம் செய்வேன். இப்போது கைதட்டியவர்களிடம் நான் இரட்டிப்பாக வரி வாங்கப் போகும் காலம் நெருங்குகிறது, ஜாக்கிரதை!'' என்று சீறினான்.



அரும்புப் பல் தெரியக் குறும்பு நகை செய்தான் யமுனைத் துறைவன். ''பாக்கியின்றிக் கேள்வியால் தாக்கி நாக்குலர்ந்து போன ஆக்கியாழ்வார் அவர்களே! கிழவரான தங்களை நான் அதிகம் சிரமப்படுத்த வில்லை. தாங்களாகவே விரித்துக் கொண்ட வலையில் தங்களைச் சிக்க வைப்பேன். நான் மூன்று வாக்கியங்கள் கூறுவேன். முதல் வாக்கியத்துக்கு 'அன்று' எனவும் மற்ற இரு வாக்கியங்களுக்கு 'ஆம்' எனவும் தாங்கள் விடை சொல்லிவிட்டால் போதுமானது'' என்றான் யமுனைத்துறைவன்.

''கேள், கேள்; கால தாமதம் செய்யாதே!'' என்றான் ஆக்கியாழ்வான்.

''கேட்கிறேன். இதோ முதல் வாக்கியம்: உன்னைப் பெற்ற தாய் மலடி. இதை 'ஆம்' என்று நிரூபிப்பாய். இரண்டாவது வாக்கியம்: நமது மன்னர் புண்ணியசாலி. இதை 'அன்று' என்று மறுப்பாய். மூன்றாவது வாக்கியம்: நம் மகாராணியார் மன்னரின் ஆதிக்கத்துக்கு மட்டுமே உட்பட்டவர். இதையும் 'அல்ல' என்று நிலைநாட்டுங்கள்.''

அநாயாசமாகக் கேள்விகளைக் கேட்டுவிட்டுச் சிரித்து நின்றான் யமுனைத் துறைவன்.

ஆக்கியாழ்வானோ சப்த நாடியும் ஒடுங்கி வெலவெலத்து நின்றான்.

'தானே தன் தாய்க்குப் பிள்ளையாகப் பிறந்திருக்கும்போது, அவளைப் பிள்ளையில்லாத மலடி என்று எப்படிக்கூறுவது?

'அரசன் புண்ணியசாலி அல்ல என்றால் பாவி என்றல்லவா ஆகும்? ராஜ சபையில் அப்படிக் கூறினால் மன்னன் உடனே தன் தலையையே கொய்துவிடுவானே?

'கடைசியாக; மகாராணியின் மீது மன்னர் மட்டும்தான் ஆதிக்கம் செலுத்த முடியும். எந்த ராஜ்யத்திலும் முதலில் மன்னர், அடுத்தது அரசி தானே? வேறு எவர் அவள் மீது ஆதிக்கம் காட்ட இயலும்? தன் தர்க்க மூளை முழுவதையும் செலவிட்டாலும் 'அன்று' என்று நிரூபிக்க முடியாத விஷயம் அல்லவோ இது?'

ஆக்கியாழ்வானின் தலை குனிந்தது குனிந்ததுதான்; நிமிரவே இல்லை.

மறுபடியும் சபையில் புளியம்பழக் கைத் தட்டல்.

'என் வயிற்றில் பாலை வார்த்தான் இந்தப் பாலன்' என்று வெற்றி நகையோடு அரசி மன்னனைப் பார்த்தாள்.

மன்னன் அப்படியும் தன் தோல்வியை ஒப்புக் கொள்ளவில்லை. அவன் கூறினான்:

''ஆக்கியாழ்வான் விடை சொல்லாததால் மட்டும் யமுனைத் துறைவன் வெற்றிபெற்றதாக ஆகிவிடாது. இப்போது யமுனைத் துறைவனே தான் கூறிய மூன்று வாக்கியங்களில் முதலாவதை 'ஆம்' என்றும், மற்றவற்றை 'அன்று' என்றும் நிரூபிக்க வேண்டும். அப்போதுதான் அவன் ஜயித்ததாக ஆகும். இதுவே,வாதம் செய்யும் மரபு'' என்றான்.

யமுனைத்துறைவனோ எள்ளத்தனையும் கலங்கவில்லை.

''மன்னா! இவ்வளவுதானே? இதோ எளிதில் நிரூபிக்கிறேன். ஆக்கியாழ்வான். அவரது தாய்க்கு ஒரே பிள்ளை என்பது அனைவரும் அறிந்ததுதானே? சாஸ்திரப்படி பிள்ளை வேண்டும் என்பது, பெற்றோர் காலமானபின் அவர்களுக்கு ஈமச் சடங்குகள் செய்து அவர்களை விண்ணுலகுக்கு அனுப்ப வேண்டும் என்பதற்காகத்தான். விண்ணுலகை அடைவதற்காகவே பிள்ளையை விரும்பும் நம் வேத மதப்படி இரண்டு பிள்ளைகள் பெற வேண்டும் என்று விதிக்கப்படுகிறது. 'ஒரு பிள்ளை பிள்ளையும் அல்ல; ஒரு மரம் தோப்பும் அல்ல' என்ற பழமொழியும் உள்ளதே! எனவே வேத தர்ம சாஸ்திரப்படி ஆக்கியாழ்வார் ஒருவரையே பெற்றெடுத்த அவரது தாய் மலடிக்குச் சமம்தான்'' என்றான்.

சபையோர், 'ஆஹா' என்றனர். ஆனால் அடுத்த வாக்கியம் மிக இடைஞ்சலானதாயிற்றே, அதை எப்படி நிரூபிப்பான்?

''மன்னா, நீ புண்ணியசாலி அல்ல என்று காட்ட வேண்டும், இல்லையா?'' என்று அச்சமின்றிக் கேட்டான், யமுனைத்துறைவன். ''தனிப்பட்டமுறையில் நீர் புண்ணியசாலிதான். ஆனால் வேத தர்மப்படி அரசன் தனி மனிதன் மட்டுமல்ல; நாட்டு மக்கள் அனைவருக்கும் அவனே பிரதிநிதி. அவர்களை நல்வழியில் நடத்த வேண்டிய பொறுப்பு அவனுடையதே. குடிமக்கள் செய்யும் பாவமெல்லாம் அரசனைத்தான் சென்றடைகிறது என்பதே சாஸ்திரம். மன்னாதி மன்னா! இப்போது நீயே ஒப்புக்கொள்கிறாயா, நீ புண்ணியசாலி அல்ல என்பதை?''

மன்னன் தன்னைப் பாவி என்று நிரூபித்தும் மகிழ்ச்சியே கொண்டான். பாலனின் தைரியத்தைப் போற்றினான்.

''யமுனைத்துறைவா! உன்னை மெச்சினேன். இன்னமும் மூன்றாவது வாக்கியம் மிச்சமுள்ளது. உனக்காக என்னிடமே சபதம் செய்து, உன் வெற்றியைத் தன் வெற்றியாகக் கருதும் இம்மகாராணியின் மீது என்னைத் தவிர ஆதிக்கம் செலுத்துவோர் உண்டு என்று எப்படி நிலைநாட்டுவாய்?'' என்று கேட்டான் அரசன்.

''வேந்தே! இதென்ன ஒரு கஷ்டமா? அரசியை மணக்கும்போது தாங்களே கூறிய மந்திரத்தை மறந்துவிட்டீர்களே! தாங்கள் கல்யாணத்தில் இவள் கையைப் பிடிக்கும் போது, 'பெண்ணே, நீ முதலில் ஸோம தேவனின் ஆதிக்கத்தில் இருந்தாய்; பிறகு கந்தர்வனுக்கு உட்பட்டு வாழ்ந்தாய்; அதன்பின் அக்னிக்கு அடங்கியிருந்தாய்; அக்னியிடமிருந்து உன்னை நான் பெற்றுக் கொள்கிறேன்' என்று மந்திரம் சொன்னீர்களே! வேத தர்மப்படி ஒரு பெண்ணானவள் குழந்தைப் பருவத்திலிருந்து வளரும்போது, முறையே ஸோமன், கந்தர்வன், அக்னி என்ற மூவரின் ஆதிக்கத்தில் இருந்துவிட்டுப் பிறகுதானே கணவனின் ஆதிக்கத்தின் கீழ் வருகிறாள்? எனவே இந்த ராணி உனக்கு மட்டுமே அடங்கியவள் என்பது சரியல்ல.

''வேத தர்ம சாஸ்திர விதிகளைக் காட்டியே என் மூன்று வாக்கியத்தையும் நிரூபித்தேன். இதை யார் எதிர்க்க முடியும்?'' என்று வெகு கம்பீரமாகக் கூறிவிட்டு, அறிவொளி வீச, வெற்றி வீரனாக நின்றான் யமுனைத்துறைவன்.

வித்வான்கள் யாவரும் யமுனைத் துறைவனுக்கு, ''ஜய விஜயீபவ'' கூறினார்கள்.

மன்னன், ''யமுனைத் துறைவரே! வயதிற் சிறியவராயினும் அறிவில் மிக்கவரான தங்களைப் பன்மையிலேயே அழைக்க வேண்டும். என் ராஜ்யத்தில் பாதி தங்களுடையது. ஏற்றருளவேண்டும். ஆஸ்தான பதவி இழந்த ஆழ்வா



னுக்கு உசிதமான தண்டனை தரவேண்டும்'' என்றான்.

''மன்னா ! ராஜ்யம் என்பது லக்ஷ்மி. அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஏற்கிறேன். ஆனால் ஆக்கியாழ்வானுக்கு நான் எந்தத் தண்டனையும் அளிக்க விரும்பவில்லை. நீ வைத்துக் கொள்ளும் பாதி ராஜ்யத்துக்கு அவரே தொடர்ந்து ஆஸ்தான பண்டிதராக இருக்கட்டும். ஆனால் ஏனைய வித்வான்களிடம் வரி வாங்கும் வழக்கத்தை அவர் கைவிட வேண்டும் என்று ஆக்ஞை செய்கிறேன்'' என்றார்.

ஆக்கியாழ்வானிடம் அதிசயமான மாறுதல் உண்டாகிவிட்டது ! அவன் ஓடோடி வந்து யமுனைத் துறைவரின் காலில் விழுந்தான். ''இனி நான் தங்கள் அடிமை. வித்வத் ஜனகோலாகலன் என்ற பட்டமும், ஆக்கியாழ்வான் என்ற இயற்பெயரும்கூட இனி எனக்கு வேண்டாம். தங்களது தாசனாக நான் **யாமுனார்ய தாசன்** என்றே புதுப் பெயர் வைத்துக் கொண்டு, தங்களிடம் கல்வி கற்பேன்'' என்றான்.

யமுனைத்துறைவர் அவனைப் பரிவோடு அணைத்து, '' நான் அவ்வளவு பெருமைக்கு உரியவன் அல்ல. என் பாட்டனாரின் தவமே என்னைக் காக்கிறது. நீரும் அவருக்கே அடிமையாக **நாதமுனிதாசன்** என்ற பெயரில் விளங்கி வாருங்கள். நீர் வகித்த ஆஸ்தான பதவியை என் அருமை ஆசிரியர் பாஷ்யபட்டர் பெறட்டும்'' என்றார்.

பாஷ்ய பட்டர் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

உணர்ச்சி பரவசத்தால் அதுவரை வாயடைத்து அமர்ந்திருந்த பாண்டிமாதேவி, அரியணையிலிருந்து எழுந்தாள். அன்பின் ஆவேசத்தோடு யமுனைத் துறைவரிடம் ஓடோடி வந்து, பெற்ற தாய் போல் அவரைக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

'' எங்கள் ராஜ்யத்தில் பாதியை மட்டும் தாங்கள் ஆள வரவில்லை. தாங்கள் என்னையே ஆள வந்தவர். இனி வருங் காலத்தில் ஆயிரம் பல்லாயிரம் ஆண்டுகள் தாங்கள் விஷ்ணு பக்தர்களை எல்லாம் ஆள வந்தவர் என்று பெருமாள் எனக்கு உணர்த்துகிறார். **ஆளவந்தாரே**, போற்றி போற்றி !'' என்று நாத் தழுதழுக்கக் கூறினாள்.

''குழந்தைகளே! உங்களைப் போன்ற ஒரு பாலன் பெரிய அறிவுச் செல்வனாகி அரசனான கதையைப் படித்தீர்கள். அவனே, மகாராணியின் மணிமொழிப்படி பிற்காலத்தில் ஆளவந்தார் என்ற பெயரில் பெரும் அருட்செல்வராகவும் விளங்கியது.

வேதனையைப் போக்கிய சாதனை!

கௌசிகன்



சிரிக்கச் செய்யும் திரவத்தை முகர்ந்து ஆராய்கிறார்கள்

1847ம் ஆண்டு, மாரிக்காலம்.

எடின்பரோ நகரில் ஒரு வீடு. மாலை நேரம். அந்த வீட்டின் சாப்பாட்டு அறையில் மூன்று பேர் கூடியிருந்தனர். ஒருவர் தம்மிடமிருந்த கண்ணாடி சீசாவிலிருந்து ஏதோ ஒரு திரவத்தை மேஜைமீதிருந்த சாஸர்களில் ஊற்றினார். அதன் மேலாகக் கவிழ்ந்தபடி மூவரும் சாஸரிலுள்ள அந்தத் திரவத்தை ஆழ்ந்து முகர்ந்து சுவாசித்தார்கள். பிறகு அதே திரவத்தை டம்ளர்களில் கொஞ்சம் கொஞ்சம் ஊற்றி ருசி பார்த்தார்கள். மாலைப் போது நகர்ந்து கொண்டிருந்தது. இப்படி வெவ்வேறு பாட்டில்களிலிருந்து-[illegible]வேறு திரவங்களை ருசிபார்ப்பதும் முகர்வதுமாக இருந்தார்கள் அந்த மூவரும்.

திடீரென்று அந்த அதிசயம் நிகழ்ந்தது. இனிய மணமுடைய ஒரு திரவத்தை அவர்கள் முகர்ந்ததும் குபீரென அடக்க மாட்டாமல் சிரிக்கலானார்கள். சிரிப்பு அலை அலையாகப் பொங்கி வந்தது. எத்தனை முயன்றும் அவர்களால் அந்தச் சிரிப்பைக் கட்டுப் படுத்த இயலவில்லை. கண்களில் நீர் வழியச் சிரித்தார்கள். மூச்சு விட முடியாமல் சிரித்தார்கள். இப்படிச் சிரித்து அவஸ்தைப்பட்டவர்கள் அப்படியே தரையில் விழுந்து கட்டையானார்கள் - இறந்தவர்களைப் போல!

அவர்கள் விரும்பியது நிகழ்ந்தது. இப்படி ஒரு நிலை ஏற்பட வேண்டும் என்றுதான் சோதனை மேல் சோதனையாக நிகழ்த்தினார்கள், **டாக்டர் ஜேம்ஸ் சிம்ஸனும்** அவர் நண்பர்களும். எதற்காக? உடலில் உணர்ச்சி மரத்துப் போகும்படி செய்வதற்கான (அனஸ்தெடிக்) ஒரு மருந்தைக் கண்டு பிடிக்க. அறுவைச் சிகிச்சையின்போது, ஆபரேஷனுக்கு உட்படும் மனிதன் தூங்கிப் போகும்படி செய்யக் கூடிய ஒரு மருந்தைக் கண்டு பிடிக்க ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தார்கள்.



டாக்டர் ஜேம்ஸ் சிம்ஸன்

அமெரிக்க நாட்டவரான ஒரு பல் வைத்தியர் இத்தகைய செயலைத் தரும் ஒரு பொருளை வைத்திய உலகுக்கு அறிமுகப் படுத்தியிருந்தார். அதன் பெயர் ஈதர். அது ஒரு அனஸ்தடிக்தான். ஆனால் சிம்ஸனும் அவர் நண்

பர்களும் இன்னும் ஈதரை விடச் சிறப்பான ஒரு பொருளைக் காண்பதில் ஈடுபட்டிருந்தனர். மனிதனைத் தூக்கத்தில் ஆழ்த்தும் ஒரு திரவத்தைக் கண்டு பிடித்து விட்டார்கள். அதுதான் **குளோரோஃபாம் (Chloroform)** குளோரோஃபாமின் சக்தியால் நினைவிழந்து தூங்கியவர்கள் சில நிமிஷங்களுக்குப் பிறகு மறுபடியும் உணர்வுபெற்று விழித்துக் கொண்டார்கள். தங்கள் கண்டுபிடிப்பைப் பற்றி அவர்களுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. அதுமுதல் உலகமெங்கும் ஆபரேஷன் செய்யும் போது குளோரோஃபாமைப் பயன் படுத்தலானார்கள்.


குளோரோஃபாம் என்ற அனஸ் தெடிக் தோன்றுவதற்கு முன்பு, நோயாளிகள் அறுவைச் சிகிச்சையின் போது பயங்கரமான அவஸ்தைகளை அனுபவித்தார்கள். பரிதாபத்துக்குரிய அந்த நோயாளிக்கு ஆபரேஷனுக்குமுன் நிறையச் சாராயத்தைக் கொடுப்பார்கள் — அவனுக்குப் போதை ஏறி நினைவு மழுங்கும்வரை. அதன் பிறகு அவனை வலுவான மனிதர்கள் பலர் அழுத்திப் பிடித்துக் கொள்வார்கள். இந்த நிலையில் சர்ஜன் தம் பணியைச் செய்வார். அறுவைச் சிகிச்சைக்கு ஆட்படும் நோயாளி அனுபவிக்கும் துன்பத்தை யாராலும் கற்பனைகூடச் செய்ய முடியாது. குளோரோஃபாம் தோன்றிய பிறகு அத்தகைய வேதனைகள் மறைந்தன. அதாவது உணர்வை மரத்துப் போகச் செய்து விட்டது அந்த அனெஸ்தடிக்.

வலியை உணர முடியாமல் செய்ய உதவியது குளோரோஃபாம். ஆனால் ஆபரேஷன் செய்யப்படும் நோயாளிகள் பெருமளவில் மரணமடைந்தார்கள். அதைத் தடுக்க என்ன செய்வது என்பது பெரிய பிரச்னையாக இருந்தது. அறுவை வெற்றிகரமாக நிறைவேற்றப் படும். ஆனால் சில நாட்களில் காயத்தில் வீக்கம் ஏற்படும். அழுக ஆரம்பிக்கும். அவ்வளவுதான். விஷம் உடலில் பரவும். மரணமும் விரைவில் ஏற்படும். இப்படிப்பட்ட நிலை சர்ஜன்களுக்கு மனத் தளர்ச்சியை உண்டாக்குவதாக இருந்தது. 'ஆபரேஷன் காய்ச்சல்' எனப்படும் இது எப்படி எதனால் ஏற்படுகிறது என்பதை அவர்களால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. இதை காங்கிரேன் (*Gangrene*) — உடல் மாமிசத்தைத் தின்று விடும் புண் — என்றும் கூறினார்கள்.

ஜோஸப் லிஸ்டர் என்று ஒருவர். ஆங்கிலேயர். 1860ல் கிளாஸ்கோ சர்வ கலாசாலையில் சர்ஜரி புரொபஸராக இருந்தார். ஆபரேஷன் காய்ச்சலைப் பற்றி அதிகக் கவலை கொண்டார் இவர். ''திறந்த காயத்தை — அதாவது வெட்டு வாயை - எவன் ஒருவன் மூடிய நிலைக்கு — காயமே இல்லாதது போலச் செய்யக் கூடியவனோ அவனே மனித இனத்துக்கு மகத்தான நன்மை செய்தவன் ஆவான்'' என்று இவர் தம் மாணவர்களிடம் கூறுவார். மனித இனத்துக்கு இவர் அப்படிப்பட்ட ஒரு சேவையைச் செய்திருக்கிறார்.

இன்றைய நவீன ஆஸ்பத்திரிகளில் எல்லாவற்றிலுமே தூய்மையும் சுத்தமும் பராமரிக்கப்படுகிறது. அதுவும் முக்கியமாக ஆபரேஷன் (தியேட்டர்) செய்யும் இடங்களில் இதில் விசேஷ அக்கறை காட்டப்படும். அறுவைச் சிகிச்சை செய்யப்படும் இடத்தின் சுவர்களிலே சதுர பீங்கான் ஓடுகள் பதித்திருப்பார்கள். டாக்டர்களும் நர்ஸ்களும் அப்பழுக்கற்ற வெள்ளை ஆடை அணிந்து மூக்கு, வாய்களை மூடிக் கட்டிக்கொண்டிருப்பார்கள்.

இன்றைய ஆபரேஷன் முறை



குளிருக்கு அடக்கம்
கூடை கெடைச்சது

பளிங்கு முகத்துக்குப்
பின்னணி ஆச்சது

வண்ணப்படம்: நாகலிங்கம்



பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் ஆபரேஷன் தியேட்டர்களின் நிலைமையே வேறு. அழுக்கும் ஆரோக்கியமின்மையும் இருட்டுமாக விளங்கின. ஆபரேஷன் செய்யும் சர்ஜன்கள் தங்கள் கைகளையோ, ஆயுதங்களையோ கழுவிக் கொள்ள மாட்டார்கள். கருப்பு அங்கியை அணிந்திருப்பார்கள். அழுக்கும் புழுதியும் படிந்து அந்த அங்கி மொட மொடப்பாக இருக்கும். ஆபரேஷன் மேஜை என்பது மரத்தாலானதொரு மேடை. இந்த நிலைமையில் கிருமிகள் பல்கிப் பெருகக் கேட்க வேண்டுமா?

உடலுக்குள் உடைந்த எலும்பு உண்டாக்கும் காயங்களில் காங்கிரேன் என்னும் நோய் ஏற்படுவதில்லை என்பதைக் கண்டார் ஜோஸப் லிஸ்டர். ஆகவே காயங்கள் புரையேறி மரணம் சம்பவிப்பது வெளிக் காற்றிலுள்ள ஏதோ ஒன்றினால்தான் என்ற முடிவுக்கு வந்தார். இந்தச் சமயத்தில்தான் லூயி பாய்ஸ்சர் என்ற பிரஞ்சு விஞ்ஞானி காற்றில் உள்ள கிருமிகளைப் பற்றிய தம் கண்டுபிடிப்பை உலகுக்கு வழங்கி இருந்தார். ஆகவே தம்முடைய பிரச்னைக்கு விடையும் விடிவும் பாய்ஸ்சரின் கண்டுபிடிப்பில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்தார் லிஸ்டர். திறந்த காயங்களில் காற்றிலுள்ள கிருமிகள் தாக்கி அங்கு வெகு வேகமாகப் பல்கிப் பெருகிப் பிராணாபாயத்தை உண்டாக்குகின்றன என்ற முடிவுக்கு வந்தார் லிஸ்டர்.

காயங்களைத் தாக்கும் கிருமிகளைக் கொல்ல ஒரு மருந்தைக் கண்டுபிடித்தார். அதற்குக் கார்பாலிக் அமிலம் என்று பெயர். ஆபரேஷன் செய்வதற்கு முன்பு தம் கைகளையும், ஆயுதங்களையும் கார்பாலிக் அமிலத்தில் முக்கி எடுத்துக் கொண்டார். காயங்களின் மீது போடப்படும் கட்டுக்களின் மீதும் இந்த அமிலத்தை ஊற்றினார். இதனால் ஆச்சரியப்படத் தக்க வகையில் பலன் ஏற்பட்டது. காங்கிரேன் என்னும் நோய்க்குக் காரணமான கிருமிகளைக் கார்பாலிக் அமிலம் கொன்று விட்டது. கிருமிகளைக் கொல்லும் சக்தி வாய்ந்த பொருள்களை நாம் ஆண்டி ஸெப்டிக் என்கிறோம். 'ஆண்டி ஸெப்டிக் ஸர்ஜரி'யைக் கண்டுபிடித்த பெருமை ஜோசப் லிஸ்டரையே சேரும்.

பின்னால் லிஸ்டர் கார்பாலிக் அமிலத்துக்குப் பதில் போராஸிக் அமிலத்தைப் (Bora cic Acid) பயன்படுத்தினார். ஏனென்றால் கார்பாலிக் அமிலத்தை விட போராஸிக் அமிலம் சருமத்துக்கு இதமளிப்பதாக இருந்தது. இன்றும் காயங்களுக்குக் கட்டுப் போடப் பயன்படும் ஆண்டி ஸெப்டிக் டிரஸ்ஸிங்கில் போராஸிக் லிண்ட்களையே பயன்படுத்துகின்றனர். வைத்தியத் துறைக்கு லிஸ்டர் ஆற்றிய பணிகளுக்காக 1881ல் விக்டோரியா மகாராணியார் அவருக்கு லார்டு பட்டம் அளித்துக் கௌரவித்தார்.

காயங்களுக்கும், சிராய்ப்புக்களுக்கும் இன்று நாம் கிருமிகளைக் கொல்லும் ஆண்டி ஸெப்டிக் ஆயிண்ட்மெண்டுகளை உபயோகிக்கிறோம். ஆபரேஷன் தியேட்டர்களில் கிருமிகளை அண்ட விடாதபடி பாதுகாப்பு அளிக்கிறார்கள். ஆபரேஷனுக்குப் பயன்படும் எல்லா ஆயுதங்களையும் கொதி நீரில் வைத்து 'ஸ்டெரிலைஸ்' செய்கிறார்கள். டாக்டர்களும் நர்ஸ்களும் காயங்களில் கிருமிகள் தாக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் செயல்படுகிறார்கள். இதை அசெப்டிக் ஸர்ஜரி (Aseptic Surgery) அதாவது கிரிமிகளற்ற ஸர்ஜரி என்று கூறுகிறார்கள்.

ஆபரேஷன் செய்யும்போது வேதனையை உணராதிருக்கவும், அறுவைச் சிகிச்சைக்குப் பின் மரணமில்லை என்று நம்பிக்கையையும் நோயாளிக்கு உண்டாக்கிய இந்த முன்னேற்றத்தை மருத்துவத் துறையின் மகத்தான முன்னேற்றம் என்று கூறத்தானே வேண்டும்?

அக்பர் பாதுஷாவின் தளபதியான வீரபல் தன்னோடு அழைத்து வந்திருந்த படையை ரீவா கோட்டைக்குவெளியே நிறுத்தினன். தான் மட்டும் கோட்டைக்குள் வந்து ரீவா மன்னன் ராஜா ராம் சந்தரை வணங்கி பாதுஷா — அனுப்பியிருந்த செய்தியை அளித்தான். அக்பர் அனுப்பியிருந்த செய்தியைப் படித்தார் ராஜா ராம்சந்த்.

''இசை மேதை ராம்தானுவை எனது சபைக்கு அனுப்பி வைக்கும்படி எவ்வளவோ முறை வேண்டிக் கொண்டேன். ஒவ்வொரு முறையும் ஏதோ ஒரு காரணம் சொல்லி அதை மறுத்து வந்துள்ளீர்கள். அவரது இசையைக் கேட்க இன்னும் எத்தனை காலம் தான் பொறுமையாகக் காத்திருப்பது? தங்களைப் போன்ற இசைப் பிரியர்களுக்கு எனது தவிப்பை உணர முடியாதா? ராம்தானுவின் இசையைப் பருக நான் துடித்துக் கொண்டிருக்கிறேன். எனது கோரிக்கையை ஏற்று இம் முறையாவது அவரை அனுப்பி வைக்கும்படி அன்போடு வேண்டிக் கொள்ளுகிறேன். தயவு செய்து மறுக்க வேண்டாம். மறுத்தால் வீரபல்லோடு வந்துள்ள படை ராம்தானுவை என்னிடம் — அழைத்து வந்து சேர்க்கும் -- இசைக்கு அடிமை பாதுஷா அக்பர்.''

'ராம்தானுவைப் பிரிவதா? அவரது இசையைக் கேட்காமல் தன்னால் உயிர் வாழ இயலுமா?' எண்ணுடம் போதே ராஜா ராம்சந்த் கலங்கினர்.

பரந்த இந்துஸ்தானத்தை ஆளும் முகலாயப் பேரரசர் அக்பர் எவ்வளவு பணிவாகத் தமது வேண்டுகோளை அனுப்பியிருக்கிறர்! அவர் மனம் வைத்தால் படையை ஏவித் தன்னைக் கைது செய்து ராம்தானுவை அழைத்துச் சென்று விடலாம். ஆனல் அம்மாதிரி முயற்சி செய்யாது தனக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசன் தானே என்ற அதிகார— மமதை இல்லாது எவ்வளவு அழகாகப் பணிவோடு எழுதியிருக்கிறர்! கடிதமே அவரது கலையுணர்வைக் காட்டுகிறதே! ஆனல் அதற்காக ராம்தானுவை அனுப்பி விடுவதா? ராம்சந்த் ஒன்றும் தோன்றுது திகைத்து நின்றர்.

அவையில் மன்னருக்குச் சமமான உயரத்தில் அழகு மிக்க மேடையில் அமர்ந்திருந்த ராம்தானு மெதுவாகக் கீழே இறங்கி மன்னரிடம் வந்தார்.

''மன்னவா, இசைப் பிரியரான உங்களைவிட்டு; மன்னனுக்கு ஈடான பெருமையை வழங்கி அன்பு காட்டி வரும் உங்களைப் பிரிந்து என்னல் உயிர்வாழ இயலுமா என்பது சந்தேகமே. இருந்தாலும் என்பொருட்டுப் பாதுஷாவின் படைகள் கோட்டைக்குள் வந்து நமது படைகளுடன் மோதுவதை நான் விரும்பவில்லை. நீங்கள் அனுப்ப மறுத்தாலும் இம்முறை நானே போகத் தயாராகி விட்டேன்'' என்றார் ராம்தானு.

அவர் கண்கள் கலங்கின. குரல் தழுதழுத்தது. ராம்சந்த் வருத்தத்தோடு தலையைக் குனிந்து கொண்டார்.

அடுத்து வந்த நல்லதொரு நாளில் ரீவா மக்களெல்லாம் கண் கலங்கிப் பிரியாவிடை கொடுக்க ராம்தானு டில்லிக்குப் புறப்பட்டார். அவருடைய பல்லக்கு ரீவா நாட்டு எல்லைக்கு வந்ததும் நின்றது. ராம்தானு பல்லக்கின் திரையைத் தூக்கிக் கொண்டு வெளியே— நோக்கினர். பல்லக்குத் தூக்கிகளில் ஒருவன் அவரை வணங்கினன். ''இவ்வளவு காலமாக ரீவா மக்களை இசை யமுதத்தில் திளைக்க வைத்த இசை மேதை ராம்தானுவுக்கு ரீவா நாட்டுச் சிற்றரசன் ராம்சந்தின் எளிய பரிசு'' என்று கூறிய அவன் அவரது கையைப் பிடித்திழுத்துக் கங்கணங்களைப் பூட்டினன். ஆம், மாறு வேஷத்தில் பல்லக்குத் தூக்கிகளில் ஒருவராக வந்தவர் ராஜா ராம்சந்தரே தான்!

ராம்தானுவின் கண்கள் கலங்கின. ''வாளெடுத்துப் போர் புரியும் வலது தோளில் எனது பல்லக்கைச் சுமந்து வந்தீர்களே மன்னவா! என்ன அபசாரம்? இத்தனைப் பெருமைக்கு நான் தகுதியுள்ளவன் தானா?'' என்று விம்மினர். ராம்சந்தரின் கரங்களைப் பற்றித் தம்



சத்தியம் காத்தவன்

ரேவதி



கண்களில் ஒற்றிக் கொண்டு, ''ஏழைப் பாடகனுக்குப் பல்லக்குச் சுமந்த ராஜா ராம்சந்தர் அளிக்கும் பரிசைத் தவிர வேறு யார் அளிக்கும் பரிசையும் இந்த ஏழை ராம்தானு தன் இடது கரத்தை நீட்டித்தான் பெறுவான். வலது கரத்தை நீட்டி அவன் பெறும் பரிசு ராஜா ராம்சந்தர் அளிக்கும் பரிசு மட்டும்தான். இது சத்தியம்'' என்று கையடித்தார்.

''சிந்திக்காது சத்தியம் செய்துவிட்டீர்களே ராம்தானு! சத்தியத்தைக் காக்க முயன்றால் பாதுஷாவின் அவையில் உங்கள் உயிருக்கே ஆபத்து நேரக் கூடுமே?'' என்று மனம் பதைபதைத்தார் ராம்சந்த். பல்லக்கு டில்லியை நோக்கி விரைந்தது.

கலைகளை வளர்ப்பதையும், கலைஞர்களைப் பெருமைப்படுத்துவதையும் தமது இலட்சியமாகக் கொண்ட முகலாயப் பேரரசர் அக்பர் பாதுஷா ராம்தானுவைப் பாடச் சொல்லிக் கேட்டு உருகிப் போனார். இவ்வளவு காலமாக ராம்தானுவின் இசையைக் கேட்காது வாழ் நாளை வீணாக்கி விட்டோமே என்று வருந்தினார். தனது கரத்தினாலேயே ராம்தானுவுக்கு முத்துப் பதக்கத்தை அணிவித்தார். அவரைத் தமது அவைப் பாடகராக்கினார்.

ராம்தானு அவைப் பாடகனாக ஏற்றம் பெற்றது மற்ற பாடகர்களின் பொறாமையைத் தூண்டி விட்டது. ராம்தானுவை ஒழிக்கத் தருந்த வாய்ப்பு எப்பொழுது கிடைக்கும் என்று அவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்.

ராஜா ராம்சந்தருக்குக் கொடுத்த சத்தியத்தைக் காப்பது ராம்தானுவுக்கு எளிதாக இருக்கவில்லை. அக்பர் நினைத்த போதெல்லாம் அவரைப் பாடச் சொல்லிக் கேட்டு ரசித்தார். தம்மையே மறந்தார். அம்மாதிரி சமயங்களிலெல்லாம் அவர் முத்து மாலை, பட்டாடை, கங்கணம் என்று ஏதாவது உயர்ந்த பொருள்களைப் பரிசு கொடுத்தும் வந்தார். அம்மாதிரிச் சமயங்களிலெல்லாம் எப்படி இடது கரத்தால் அவற்றை வாங்குவது என்று ராம்தானு தவிப்பார். ஆனால் அவரது நல்ல காலம் அவர் வந்து வாங்கிக் கொள்ளும் வரை அக்பர் காத்திருப்பதில்லை. உற்சாக மிகுதியில் தாமே வந்து அவருக்கு அவற்றை அணிவித்தார். அல்லது அருகிலுள்ள அமைச்சரை அழைத்து, அவரிடம் அளித்து, அவரையே அணி



விக்கர் செய்வார். அப்படியும் தாமே எழுந்து வாங்க வேண்டிய சில சந்தர்ப்பங்களும் ராம்தானுவுக்கு ஏற்படத்தான் செய்தன. அம்மாதிரிச் சமயங்களில் கை சுளுக்கிக் கொண்டது போல நடித்து நிலையைச் சரி செய்து வந்தார். ஆனால் எத்தனை நாட்களுக்கு இப்படி நடிக்க முடியும்?

ராம்தானுவை ஒழித்துக் கட்ட வாய்ப்புக் கிடைக்காதா என்று காத்திருந்த பொறாமைக்காரர்கள், அவர் மன்னர் அளிக்கும் எந்தப் பரிசையுமே கைநீட்டி வாங்காத உண்மையைக் கண்டு பிடித்தனர். அவ்வளவு தான். ஒன்றுக்குப் பத்தாக அதை வளர்த்து, மாற்றி பாதுஷாவை அவமானப் படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் அவர் அப்படி நடந்து கொள்கிறார் என்று கலகமூட்டினர்.

அக்பர், தாம் பரிசளிக்க முன்வந்த சமயங்களிலெல்லாம் ராம்தானு நடந்து கொண்ட முறையை எண்ணிப் பார்த்தார். பொறாமைக்காரர்கள் கூறுவது ஏன் உண்மையாக இருக்கக் கூடாது என்று அவருக்கும் தோன்றியது. அடுத்த நாள் சபை கூடும்போது இது உண்மையா என்பதைக் கண்டு பிடித்துப் பார்த்து, உண்மையாக இருந்தால் ராம்தானுவின் தலையைச் சீவி விடுவது என்று அக்பர் முடிவு செய்தார்.

அடுத்த நாள் அக்பரின் சபை கூடியது. வழக்கப்படி ராம்தானு இசையால் எல்லோரையும் தன்நிலை இழக்க வைத்தார். தம்மை அவர் அவமானப் படுத்துகிறார் என்ற ஆத்திரத்தில் பாதுஷாவின் மனம் இசையில் ஒன்ற வில்லை. சாதாரணமாக மணிக்கணக்கில் ராம்தானுவைப் பாடச் சொல்லி மகிழும் அக்பர், அன்று ராம்தானு தமது முதல் பாட்டை முடித்ததுமே, ''பலேபலே'' என்று கைதட்டி விட்டுத் தமது கழுத்தில் அணிந்திருந்த நவரத்ன மாலையைக் கழற்றினார்.

''ராம்தானு ... நீங்கள் இசை உலகுக்கு மன்னர். நானோ இந்துஸ்தானம் என்ற மண்ணை ஆளும் பாதுஷா. உங்கள் இசைக்குப் பரிசாக இந்த உலகத்தையே கொடுத்தாலும் ஈடாகாது. ஆயினும் எனது அன்பின் அடையாளமாக இந்த நவரத்தின மாலையை அளிக்கிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றார்.

'இனி தப்ப முடியாது. வகையாகச் சிக்கிக் கொண்டு விட்டோம். இன்றோடு வாழ்க்கை முடியப் போகிறது' என்ற

முடிவுக்கு வந்த ராம்தானு, உயிரைக் கொடுத்தாவது செய்த சத்தியத்தைக் காப்பது என்று உறுதி செய்து கொண்டார். எழுந்து அக்பருக்கு அருகே வந்தார். கரங்களைக் கட்டிக் கொண்டு பணிவாகத் தலைகுனிந்தார். கைநீட்டி மாலையை வாங்கவில்லை.

அக்பர் ஆத்திரம் கொண்டார். ''உம், மாலையைப் பெற்றுக் கொள்ளுங்கள் ராம்தானு...'' என்றார்.

ராம்தானு அமைதியாக மன்னரை நோக்கினார். ''பாதுஷா... இந்த ஏழையை மன்னிக்க வேண்டும். நீங்கள் அளிக்கும் பரிசை நான் பெற வேண்டுமானால் அதை இடது கரத்தால் தான் வாங்கிக் கொள்ள இயலும். அப்படிச் செய்வது தங்களை அவமானப் படுத்துவதாகுமாதலால் என்னைக் கட்டாயப்படுத்தாதீர்கள்'' என்றார்.

''ஏன்? உங்கள் வலதுகரம் நன்றாகத் தானே இருக்கிறது?'' என்று சீறினார் ஆத்திரத்தால் தம் நிலையை இழந்த அக்பர்.

''கைக்கு ஒன்றுமில்லை மன்னவா. ஆனால் ராஜா ராம்சந்தர் அளிக்கும் பரிசை மட்டும்தான் எனது வலது கரம் ஏற்கும். அம்மாதிரி சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன்.''

''என்னை அவமானப்படுத்த ராம்சந்தர் செய்த சதியா இது? உங்களிடம் இப்படி ஒரு சத்தியம் வாங்கிக் கொண்ட பிறகுதான் உங்களை ராம்சந்தர் என்னிடம் அனுப்பி வைத்திருக்கிறாரா? என்ன துணிவு இருந்தால் ராம்சந்த் இப்படிச் செய்திருப்பார்?'' என்று ஆத்திரத்தில் பல்லைக் கடித்தார் அக்பர்.

ராம்சந்தரின் ரீவா நாடும், ராம்தானுவும் அழிந்தனர் என்று எல்லோரும் முடிவு கட்டினர். ராம்தானு மறுநாள் காலைப் பொழுதைக் காண உயிரோடு இருக்க மாட்டார் என்று பொறாமைக்காரர்கள் மகிழ்ந்தனர்.

ராம்தானு அமைதியாகப் பதிலளித்தார்.

''மன்னிக்க வேண்டும் பாதுஷா. ராஜா ராம்சந்தர் எந்தக் குற்றமும் செய்யவில்லை. என்னைப் பிரிய மனமில்லாத அவர், மாறு வேடத்தில் பணியாளாகி எனது பல்லக்கைத் தாமே சுமந்து ரீவா நாட்டு எல்லைவரை வந்து எனக்குப் பிரியாவிடை கொடுத்தார். அந்த அரிய செயலுக்குப் பதிலாகத்தான் நான் அப்படி ஒரு சத்தியம் செய்து கொடுத்தேன். இப்படி சத்தியம் செய்து விட்டீர்களே, சத்தியத்தைக் காக்கப் போய் உயிரிழக்காது இருக்க வேண்டுமே என்று ராம்சந்த் கலங்கினார்.''

அக்பர் பாதுஷா திகைப்போடு உட்கார்ந்திருந்தார். சபையிலே ஒரே அமைதி. பாதுஷா என்ன கூறப் போகிறார் என்பதைக் கேட்க எல்லோரும் ஆவலாகக் காத்திருந்தனர்.

''ராம்தானு ... கலைஞர்களைப் பெருமைப் படுத்துவதில் என்னை வெல்ல யாருமில்லை என்று கர்வத்தோடு இருந்தேன். ராம்சந்த் என்னை வென்று விட்டார். வாளேந்தி நாட்டைக் காக்கும் தமது வலது தோளில் உங்களுக்குப் பல்லக்குச் சுமந்து வந்திருக்கிறார் என்றால் அவரது கலை உள்ளம் எவ்வளவு பெருந்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும்! கலைஞனுக்கு இந்த அளவுக்கு ஏற்றம் கொடுத்தவர்கள் யாருமில்லை.''

அக்பரின் முகத்தில் இருந்த கடுமை மறைந்தது. அதில் வியப்பும் கருணையும் குடிகொண்டன.

''ராம்தானு ... ராஜா ராம்சந்தரின் கலையுணர்வுக்கும் பெருந்தன்மைக்கும் நான் தலை வணங்குகிறேன். நன்றிப் பெருக்கால் நீங்கள் அவருக்குச் செய்து கொடுத்துள்ள சத்தியத்தைக் காக்க நான் கண்டிப்பாக உங்களுடன் ஒத்துழைப்பேன். அதைப் பெருமையாகக் கூட எண்ணுகிறேன். நீங்கள் சத்தியத்தை மீற வேண்டாம். இனி இந்தச் சபையில் நான் அளிக்கும் பரிசுகளை நீங்கள் இடது கரத்தினாலேயே பெற்றுக் கொள்ளலாம்'' என்றார்.

''பாதுஷா...! என்னுடைய சத்தியத்தைக் காக்க, தங்களுக்கு அவமானம் என்று தெரிந்திருந்தும் இடது கரத்தினாலேயே பரிசை வாங்க அனுமதித்துள்ளீர்களே ...! ராஜா ராம்சந்தரின் பெருந்தன்மைக்கும் அன்புக்கும்தாங்கள் எந்த வகையிலும் குறைந்தவரல்ல என்பதைக் காட்டி விட்டீர்கள்'' என்று உணர்ச்சிப் பெருக்கால் விம்மினார் ராம்தானு.

கலைஞர்களை உயிராகப் போற்றும் மன்னனும், இசையைத் தெய்வமாக மதிக்கும் கலைஞனும் ஒருவரது பெருமையை மற்றவர் புரிந்து கொண்டார்கள். அதற்குப் பிறகு அவர்களைப் பிரிக்கப் பொறாமைக்காரர்களால் முடியவில்லை. ராம்தானு பிற்காலத்தில் அக்பரால் **தான்சேன்** என்று அழைக்கப் பெற்றார். அக்பர் — தான்சேனின் நட்பு பாரத நாட்டின் இசை வரலாற்றில் அழியாப் புகழைப் பெற்றது.

நந்து சுந்து மந்து ④

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்




மேஜை மீது வைத்திருந்த முழு கேக்கையும் காணாது எல்லாரும் தேடுகின்றனர். கடைசியில்...
உன் வேலை தானா இது? அத்தனை பதார்த்தம் பசியா உனக்கு? பட்டினி போட்டாத்தான் உனக்கு புத்தி வரும்.
மங்குவை வெளியே தள்ளிக் கதவைச் சாத்தி விடுகின்றனர்.
ஊ... ஊ... கதவைத் திறங்க... கேக் அதிலே கை வைக்கறதுக் குள்ளேதான் நீங்க பிடிங்கிட்டீங்களே ... ஊ... ஊ... எனக்கு மட்டும் பசிக்காதா? திறங்க கதவை.
கதவைத் திறக்க ஒரு யுக்தி செய்கிறது மங்கு.
பச்சைப் பசும்புல்... இந்தா. இந்தா... பா... பா... ஓடி வா... ஏமாத்தறேனேன்னு கோபம் வரதா? உனக்குக் கோபம் வந்தாத்தான் என் யுக்தி பலிக்கும்.
குதிரைக்குப் போக்குக் காட்டி, கோபமூட்டி இழுத்து வந்த மங்கு, வீட்டுக் கதவருகில் வந்ததும் சட்டென்று தாவி மேலே போய் விடுகிறது. எதிர் வகையாக மாட்டிக்கொண்டு விட்டதாக எண்ணிய குதிரை சட்டென்று திரும்பித் தன் குணத்தைக் காட்ட.
ஆ! அப்படித் தான். இன்னும் பலமா உதை கொடு. அப்பத் தான் கதவைத் திறப்பாங்க.
குதிரை கொடுத்த உதைகளினால் கதவைத் திறந்து கொண்டு வருகிறார்கள் நந்து சுந்து. அப்போது மங்கு அழகாக ஒரு நாடகமாடுகிறது.
ம்... வா... வா! அவங்க சாப்பிடும் போது இப்படியா தொந்திரவு செய்வது.
தேவலாமே! நம்ம பயல் மங்கு மன சிலே எதை யும் வச்சுக்காம வெறிபுடிச்ச குதிரையை அடக்கப் போராடறானே.
நிறையச் சாப்பிடு. எல்லாம் உனக்குத்தான். இன்னிக் குப் பிரதம விருந்தாளி இங்கே நீதான்.
தொடரும்

மலரும் பூவெனப் பிள்ளை
வளர்ந்திடப் பலமான துணை—
இன்க்ரிமின்* டானிக்

இளமைப் பருவம்—பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனத்தை அள்ளி வளரும் பருவம்...இப் பருவத்தில் அவளுக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவள் வளர்ச்சியை! பசித்துப புசிப்பாள்... உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, இவற்றோடு உங்கள் மகளின் வளர்ச்சிக்கு மிகமிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.



இன்க்ரிமின்* டானிக்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—
Lederle சயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் சயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்




டிராப்ஸ் : 2 மாதங்கள் முதல்
2 வயது வரையில்
ஸிரப் : 14 வயது வரையில்

இவர்கள் கேட்ட நல்ல ஹாஸ்யங்கள்!



குடிகாரன்: நான் மாத்திரம் மந்திரியானல் மொதல்லெ எங்க டாக்டர் ராஜநாயகத்தை டாக்டர் ஜனநாயகம்னும், காமாட்சி, மீனாட்சிங்கற பேரையெல்லாம் இனிமே மக்களாட்சின்னு மாத்திடணும்னு சட்டமே கொண்டாருவேன்.

— ஆர். ராதாகிருஷ்ணன்



ஒருவர்: பாண்டு! நீ இப்போ என்ன வேலே செய்கிறாய்?

பாண்டு: இப்போ நான் 'பாண்டு' வாசிக்கக் கிட்டிருக்கேனுங்க.

— எஸ். சத்தியநாராயணன்


ஒருவன்: நான் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு பிறந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

மற்றவன்: எதற்காகவோ?

அவன்: நான் எதையாவது கண்டுபிடிக்கலாமென்றால் அதையெல்லாம் முன்னாலேயே கண்டுபிடித்துத் தொலைத்திருக்கிறார்கள். நான் எதைக் கண்டுபிடிப்பது?

— எம். சம்பத்





கமலா: எனக்குத் தெரிந்த ஒருவருக்கு வயது தொண்ணூறு ஆகிறது. ஆனால் ஒரு முடி கூட நரைக்கவில்லை.

ராணி: அதெப்படி? ஆச்சரியமாக இருக்கிறதே!

கமலா: அவருக்குத் தலை வழுக்கை!

— வி. செல்வம்

ராமு: உங்கப்பா கடை லாபத்திலே ஓடறதா, இல்லே நஷ்டத்திலா?

சோமு: எங்கப்பா கடை ஓட வில்லேயே, அதே இடத்திலேதானே நிற்கிறது!

— ஆனந்த்





மகன்: அப்பா, இன்னிக்கு நான் வாத்தியாரிடம் அடிபடவே இல்லே.

அப்பா: நல்லது, இப்படித்தான் தினமும் இருக்கணும்.

மகன்: ஏம்பா, இன்னிக்கு மாதிரியே தினமும் வாத்தியார் லீவு எடுத்துக்கொள்வாரா?

— டி. அன்புச் செல்வன்




ஒருவர்: நான் கார் ஓட்டுவதற்குக் கற்றுக் கொள்ள மூன்று மாதங்களாயிற்று.
மற்றவர்: அட, இது எவ்வளவோ பரவாயில்லையே! நான் கார் ஓட்டக் கற்றுக்கொள்ள மூன்று கார்களேயல்லவா ஆயிற்று?
கண் ஆபரேஷன் செய்துகொண்டவர்: ஹா, என் கண்ணே ....!
நர்ஸ் (கோபத்துடன்): ஷட் அப்!
அவர்: உன்னை யார் கூப்பிட்டது? என் கண்ணையல்லவா சொன்னேன்!
— என். அனந்த கல்யாணராமன்
பெரியவர்: ஏன்டா, இப்படி நிக்காம ஓடிண்டே இருக்கியே உன் பேர் என்ன?
சிறுவன்: மணி.
— ரங்கநாயகி
கார் உரிமையாளர்: இந்தா ஐந்து ரூபாய் வைத்துக்கொள். உனது விலாசத்தைக் கொடுத்தால் இன்னும் பணம் அனுப்புகிறேன்.
காரில் அடிபட்டவன்: என்னைத் தவணை முறையில் கார் விபத்தில் சிக்க வைக்க நினைக்கிறாயா?
—— பி. ரவிச்சந்திரன்
ஒருவர்: இந்தச் சட்டை அழகாக இருக்கிறதே தீபாவளிக்கு எடுத்ததா?
மற்றவர்: இல்லையே, இது எனக்கு எடுத்தது!
— ஆர். சுந்தர்
ஒருவன்: இந்தக் குடத்தில் ஒரு பெரிய ஓட்டை இருக்கிறது.
கடைக்காரர்: எங்கே ஓட்டை இருக்கிறது, இது நல்ல குடமாயிற்றே?
அவன்: அதன் வாயே இத்தனை பெரிய ஓட்டைதானே, தெரியவில்லையா உங்களுக்கு?
— ஆர். சுந்தர்



ஒரே ஒரு பொய்

— ஜெயவண்ணன் —

கரும் பலகையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் பாஸ்கர்.

அங்கே மும்முரமாகப் படம் ஒன்றை வரைந்து கொண்டிருந்தான் அரசு. பரங்கிக் காய் அளவு தலை, அகன்ற ஆந்தை விழிகள், முறம் போன்ற காதுகள், குடமிளகாய் மூக்கு, கட்டபொம்மன் மீசை, பாளம் பாளமாக அகன்ற பல் வரிசை, பெருத்த வயிறு, சாண் நீளமே உள்ள கால்கள், கைகள், தலையில் சிண்டு....!

''எப்படி இருக்கிறது படம்?'' என்று தன் நண்பர்களைப் பார்த்துக் கேட்டான் அரசு.

''பிரமாதம்!'' என்ற அவன் நண்பன் கோபால், ''பெயரையும் சீக்கிரமே எழுதிவிடு'' என்றான்.

''இவர்தான் கிட்டு வாத்தியார்'' என்று அவன் எழுதி முடிப்பதற்கும், வகுப்பறையின் முன் காவலுக்கு இருந்த பாலன், ''கிட்டு, வாத்தியார் வர்றாருடா!'' என்று குரல் கொடுத்துக் கொண்டே உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது.

அவ்வளவுதான். அனைவரும் தங்கள் தங்கள் இடத்தில் வந்து அமர்ந்துவிட்டனர். சற்றுமுன் களேபரப்பட்ட வகுப்பறை அது என்று யாரும் நம்பமாட்டார்கள். அவ்வளவு அமைதி நிலவியது அங்கே.

கிட்டு வாத்தியார் கையில் பிரம்புடன் உள்ளே நுழைந்தார். மாணவமணிகள் அனைவரும் மிக்க மரியாதையுடன் எழுந்து நின்றனர். அவர்களைப் பார்த்து உட்காரும்படி சைகை காட்டிவிட்டுத் தம்மிடத்தில் வந்து அமர்ந்தவர், கையிலிருந்த பிரம்பையும் புத்தகங்களையும் மேஜைமேல் வைத்துவிட்டுத் திரும்பினார்.

அவர் கண்கள் கரும் பலகையில் இருந்த உருவத்தைப் பார்த்தது. அந்த உருவத்தின் கீழ எழுதியிருந்ததையும் பார்த்தது. அவர் கண்கள் கோபத்தால் சிவந்தன.

வகுப்பறையில் இருந்த ஒவ்வொரு மாணவனையும் உற்றுப் பார்த்துக் கொண்டே வந்தவர், பாஸ்கரைப் பார்த்ததும், ''இந்தப் படத்தை இங்கு வரைந்தது யார்?'' என்றார்.

பாஸ்கர் அமைதியாக எழுந்து நின்றான். பின், ''நானில்லை சார்'' என்றான்.

''அது தெரியும். உண்மை உனக்குத் தெரிந்திருக்கும். தெரிந்த உண்மையைச் சொல்.''

''...............''

''இந்த வகுப்பில் நீ ஒருவன்தான் பொய் சொல்லமாட்டாய் என்று நம்பினேன். என் நம்பிக்கையைக் கெடுத்து விடாதே!......''

'சார்......'' என்ற பாஸ்கர் ஒரு கணம் தயங்கினான். பின், ''அரசுதான் சார்......'' என்றான்.

கிட்டு வாத்தியார் கையில் பிரம்புடன் அரசை நோக்கி நடந்து வந்தார். அவன் அருகே வந்ததும், ''நீட்டுடா, கையை.....!'' என்றார்.

எழுந்து நின்ற அரசு கையை நீட்டினன். சூடாக இரண்டை வாங்கிக் கொண்டான்.

'' வகுப்பு முடியும் வரை பெஞ்சின் மீது ஏறி நில்.''

அரசு ஏதும் கூறாது, அடிபட்ட கையைத் தடவி விட்டுக் கொண்டே பெஞ்சின் மீது ஏறி நின்றான்.

கிட்டு வாத்தியார் பாடத்தை நடத்த ஆரம்பித்தார்.

பாஸ்கர் திரும்பி அரசைப் பார்த்தான். அரசு ஆத்திரத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டிருந்தான்.

கையில் புத்தகத்துடன் அமைதியாக வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான் பாஸ்கர்.

குளத்தங் கரையை ஒட்டிய ஒற்றையடிப் பாதையைக் கடந்து கொண்டிருந்த போது, ''ஏய், அப்படியே நில்!'' என்ற குரல் வந்தது.

பாஸ்கர் நின்றான். பின் திரும்பிப் பார்த்தான். சற்றுத் தொலைவிலிருந்த ஆலமரத்தடியிலிருந்து அரசு, கோபால், பாலன் மூவரும் அவனை நோக்கி நடந்து வந்தனர். அவனைச் சுற்றி மூன்று பேரும் நின்று கொண்டனர்.

''டேய் பாஸ்கர்! ஏண்டா என்னை வாத்தியாரிடம் காட்டிக் கொடுத்தே?'' என்று கேட்டான் அரசு.

''அவர் உண்மையைச் சொல்லும்படி கேட்டார். சொன்னேன். நானாக வலியப் போய்ச் சொல்லவில்லையே!'' என்றான் பாஸ்கர்.

''அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரன் என்ற நினைப்போ?'' என்றான் பாலன்.

'' உண்மையைச் சொல்ல வேண்டுமானால் அரிச்சந்திரன் வீட்டுக்குப் பக்கத்தில்தான் இருக்க வேண்டுமா?'' என்றான் பாஸ்கர்.

என்னடா, திமிராகப் பதில் சொல்கிறாய்?'' என்ற கோபால், ''டேய், அரசு! இவனை இன்று நன்றாகக் கவனித்துவிட வேண்டும். இல்லையென்றால் தொடர்ந்து நம்மிடம் வாலாட்டிக் கொண்டுதான் இருப்பான்'' என்றான்.

'' ஆமாம்.... ஆமாம்....'' என்ற அரசு, '' நமது எதிரிகளுக்கு வழக்கமாகத் தரக்கூடிய தண்டனைதானே?'' என்று கூறிவிட்டு, ''நடக்கட்டும், சீக்கிரம்!'' என்றான்.

பாலனும் கோபாலும் ஆலமரத்தடிக்கு ஓடினர். பின் இரண்டு காலி டின்களுடன் குளத்துக்குச் சென்று டின் நிறையத் தண்ணீர் எடுத்து வந்தனர்.

''அபிஷேகத்தை நடத்துங்கள்!'' என்றான் அரசு.

பாலனும் கோபாலும் அந்தத் தண்ணீரைப் பாஸ்கரின் தலையில் ஊற்றினர்.

பாஸ்கர் முழுவதும் நனைந்துவிட்டான். அவன் புத்தகங்களும் நனைந்துவிட்டன.

''போடா, இனியாவது எங்கள் விஷயத்தில் வாலாட்டாதே!'' என்றான் அரசு.

பாஸ்கர் அழுது கொண்டே வீட்டை நோக்கி நடந்தான்.

மறு வாரத்தில் ஒரு நாள். காலை நேரம்.

புத்தகப் பையைத் தோளில் வழக்கம் போல் மாட்டிக் கொண்டு பள்ளிக்கூடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான் பாஸ்கர்.

வழியில் அவர்களுக்குச் சொந்தமான மாந்தோப்பு ஒன்று இருந்தது. மறுநாள் சந்தைக்குச் செல்வதற்காக ஆயிரம் காய்கள் பறித்து வைக்குமாறு தோட்டத்துக் காவல்காரன் வடிவேலிடம் கூறும்படி அவன் அப்பா அவனிடம் சொல்லி அனுப்பியிருந்தார். வடிவேலிடம் அந்தச் செய்தியைக் கூறுவதற்காகக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் பாஸ்கர்.

அங்கே அவன் கண்ட காட்சி அவனைத் திகைக்க வைத்துவிட்டது.

அங்கே, அரசு, பாலன், கோபால் மூன்று பேரையும் மரத்தில் கட்டி வைத்துவிட்டு எதிரே வடிவேல் உட்கார்ந்திருந்தான். பாஸ்கரைக் கண்டதும் வடிவேல் எழுந்து நின்றான். மற்ற மூவரும் அவமானம் தாங்காது தங்கள் தலையைத் தாழ்த்திக் கொண்டனர்.

''என்ன நடந்தது வடிவேல்?'' என்று கேட்டான் பாஸ்கர்.



"இனம் நம் தோப்பில் மாங்காய் திருட்டுப் போய்க் கொண்டேயிருந்தது. இந்தப் பசங்கதான் இவ்வளவு நாளா திருடிக்கிட்டு இருந்திருக்கிறாங்க. இன்று மாட்டிக்கிட்டாங்க. கட்டிப் போட்டுட்டேன்" என்றான் வடிவேல்.

பாஸ்கர் சிரித்தான்.

"என்ன தம்பி சிரிக்கிறீங்க?"

"ஆமாம், வடிவேல். எங்க வாத்தியார் விலைக்கு மாங்காய் கிடைக்குமா என்று அப்பாகிட்டே கேட்டுவிட்டு வரச் சொன்னார். வாத்தியார்கிட்டே எப்படிக் காசு வாங்குவது என்று நினைத்து, நாமே பறித்து அவருக்குக் கொண்டு போய்க் கொடுத்து விடலாம் என்று முடிவு செய்து இவர்களை விட்டுப் பறிக்கச் சொன்னேன். இந்தத் தோப்புக்குள் இன்னைக்குதான் முதன் முதலா இவர்கள் வந்திருக்கிறார்கள். நீ என்னடா என்றால் முன்பு திருட்டுப் போனதுக்கும் இவர்கள்தான் காரணம் என்கிறாய்."

"அப்படியா, தம்பி, சேதி! இவர்கள் இதை என்னிடம் சொல்லவே இல்லையே.....!" என்ற வடிவேல், அவசர அவசரமாக அந்த மூன்று பேர்களின் கட்டுக்களையும் அவிழ்த்துவிட்டான்.

"சரி வடிவேல், நாளைக்குச் சந்தைக்குப் போகணுமாம். நல்ல காயாக ஆயிரம் காய்கள் பறித்து வை. அப்பா சொன்னார்கள்" என்று கூறிவிட்டு, வகமாக வெளியே நடந்தான் பாஸ்கர். அவனைத் தொடர்ந்து அரசு, பாலன், கோபால் மூவரும் ஓடி வந்தனர்.

குளத்தங் கரையை ஒட்டிய ஒற்றையடிப் பாதையில் அவன் நடந்துகொண்டிருந்தபோது அந்த மூன்று பேரும் அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டு நின்றனர். முன்பொரு முறை அவனைச் சுற்றி நின்று அபிஷேகம் செய்து அனுப்பினார்களே, அதே இடம்தான் அது.

"நல்ல நேரத்தில் ஒரு பொய்யைக் கூறி எங்களைக் காப்பாற்றினாயே, உனக்கு எப்படி நன்றி கூறுவது என்றே தெரியவில்லை" என்றான் அரசு.

"நீ வரவில்லை என்றால் இந்நேரம் காவல்காரன் எங்கள் தோலை உரித்திருப்பான்" என்றான் பாலன்.

"சமயத்தில் வந்து இன்று எங்களைக் காப்பாற்றினாய். அன்று நடந்ததையெல்லாம் மறந்து எங்களை மன்னித்துவிடு" என்ற கோபால், "நீ கூறிய ஒரு பொய் எங்கள் மூவரையும் திருத்திவிட்டது" என்றான்.

"அது போதும் எனக்கு" என்றான் பாஸ்கர் சிரித்துக்கொண்டே.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்


Agfacolor
இயற்கையான
வண்ணங்கள்
பொருந்திய பிலிம்.
CN 3
CT 18
AGFA